122

பூகோள சாஸ்திரம்

மதுரை ஜில்லா

4 - JUN 1940
MADRAS
3156

E.M. கோபாலகிருஷ்ண கோன்

மதுரை, சென்னை.

GEOGRAPHY

OF THE

MADURA DISTRICT

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
4 - JAN 1940
MADRAS

915.482 [L]

CLASS IV

BY

P. Sundararaja Aiyengar, B.A., L.T.,

MADURA

Revised by

V. Subburathnam Iyer, B. A., L. T.,

Geography Assistant, Islamiah High School, Melvisharam

In accordance with 'New Syllabus for Elementary Schools, 1939'

E. M. GOPALAKRISHNA KONE

MADURA MADRAS

Rights Reserved]

1939

[Price As. 6

First Edition—1939

Excelsior Power Press, Madura:—39

முகவுரை

இச்சிறு புத்தகம் இவ்வருஷம் (1939) துரைத்தனத்தார் வெளியிட்ட புதிய பாடத் திட்டத்தை யொட்டி நான்காவது வகுப்பு மாணவர்களுக்காக எளிய நடையில் எழுதப்பட் டுள்ளது.

பூகோள சாஸ்திரமாவது மனிதன் எப்படி இயற்கையின் சக்தியை ஜயித்துப் பூமியைத் தன் இருப்பிடமாக்கிக் கொண்டான் என்பதைக் குறிக்கின்றது. ஓர் பிரதேசத் தின் இயற்கை யமைப்பினுல் மழை, சீதோஷ்ணம் ஆகிய இவைகளும், மழை, சீதோஷ்ணத் தால் பயிர்களும், பயிர்களால் மானிட வாழ்க்கையும் விசேஷ மாறுதல்களை அடைகின்றன.

இவ்விஷயங்கள் ஒன்றை யொன்று எவ்வளவு தூரம் பாதிக்கின்றன என்பதை ஆராயப் பல உண்மைகள் புலப்படும்.

"தெரிந்தவைகளைக் கொண்டு தெரியாதவைகளைக் கற்றுக் கொள்ளுதல்" என் பது போதனு முறையில் முக்கிய விதியாகும். அதேபோல, பூகோளப் பாடத்திலும், ஒவ் வோர் புது விஷயத்தையும் கற்பிக்கும் பொழுது அடிக்கடி அந்தந்தக் கிராமத்துக்குச் சமீ பத்திலுள்ள விஷயங்களைப் பிள்ளைகளுக்கு ஞாபகப்படுத்தி, அவைகளை ஒப்பிட்டுக் காட்ட வேண்டும். உதாரணமாக ஒரு மலைப் பிரதேசத்தைப்பற்றிப் போதிக்கும் பொழுது, சமீபத் திலுள்ள குன்றுகளைக் குறிப்பிட்டு, இவற்றிற்கும் அதற்கும் பரிமாணம் முதலியவைகளில் உள்ள சம்பந்தத்தைக் குறிப்பிடலாம்.

இதற்காகப் பிள்ளைகளை அடிக்கடி உல்லாசப் பிரயாணங்களுக்கு (Excursions) அழைத்துச் செல்வது நலம். சமீபத்திலுள்ள குன்றுகள், ஏரிகள், நதிகள், வயல்கள், வண்டிப்பேட்டை, பஸ்கள் நிற்குமிடம், ரயில்வே ஸ்டேஷன் ஆகிய இவைகளுக்குக் குழந் தைகளை அழைத்துச் சென்று, இவைகளைப் பற்றிய விஷயங்களை நேராகத் தெரிந்து கொள் ளும்படி செய்தால், மற்ற வெளியிடங்களைப் பற்றிப் பயிலுங்காலத்து, இவ் விஷயங்கள் அதிக உபயோகமுள்ளவைகளாக இருக்கும். "சுதேசப் பிரதேசமே (Home Region) எல்லாப் பூகோள சம்பந்தமான விஷயங்களையும் அறிந்து கொள்ளுவதற்கேற்ற ஆராய்ச்சிச் சாலை."

உல்லாசப் பிரயாணம் செய்யும் சமயத்தில், வழியில் கிடைக்கும் அதிசயப் பொருள்கள், தானியக் கதிர்கள், இன்னும் மற்றப் பொருள்களை அவ்வப்போது சேர்த்து, ஒவ்வொரு வகுப்பிலும் பொருட்காட்சிகள் (Museums) வைக்கலாம். சமாசாரப்பத்திரிகைகள், ரயில்வே விளம்பரங்கள், சர்க்காரின் விவசாய வர்த்தமானங்கள், மற்றும் இதர இலாகாக் களில் வெளியிடப்படும் அறிக்கைகளில் பூகோள சம்பந்தமான வர்த்தமானங்கள் ஆகிய இவை களையும் சேகரித்தல் நலம்.

போக்கு வரவு மார்க்கங்களைப் பற்றிச் சொல்லுமிடத்து, நேராக அவைகளில் பிர யாணம் செய்வதுபோல் வர்ணனை முறை பின் பற்றப்பட்டிருக்கிறது. மாணவர்கள் படித்த பாடங்களைத் தாமே சிந்தித்து, விஷயங்களை உணர்வதற்கேற்ற பயிற்சிகள் ஒவ்வொரு பாடத்தின் இறுதியிலும் சேர்க்கப்பட்டிருக்கின்றன. இவைகளில் பல கேள்விகள் பிள்ளைகளின் சொந்தக் கிராமங்களைப் பற்றியவையாகும்.

இப் புத்தகத்தின் முன்னேற்றத்துக்குரிய விஷயங்கள் வந்தனத்துடன் அங்கீகரிக் கப் பெறும்.

ஆசிரியர்.

பொருளடக்கம்

பாடம்	விஷயம்	பக்கம்
பொது விபரம்		
1.	எட்டுத் திசைகள்	1
2.	வெயில், மழை, மேகமுள்ள நாட்கள்	2
3.	பருவ காலங்கள்	3
4.	வாயு, காற்று	4
5.	தண்ணீர் நீராவியாகுதல்	5
6.	மழையும் அதன் செய்கையும்	6
7.	கடலும் கடற் பிரயாணமும்	7
8.	கிராமமும் நகரமும்	9
9.	எங்கு, எவ்விதம் நகரங்கள் உண்டாகின்றன ?	12
10.	கிராமங்களிலும் நகரங்களிலும் ஜனங்களின் வாழ்க்கையிலுள்ள வித்தியாசங்கள்	,,
11.	உள்ளூரில் விளையும் அறுவடைத் தானியங்கள்	13
12.	போக்கு வரவு மார்க்கங்கள்	15
13.	சந்தை கூடுமிடம்	17
14.	தொழிற்சாலைகள்	18
15.	படங்களும் பிளான்களும்	19
மதுரை ஜில்லா		
16.	எல்லைகள்	21
17.	இயற்கையமைப்பு: 1. மலைகள், 2. பீடபூமி, 3. ஆறுகள்	23
18.	ஜில்லா தாலூகாக்களிலுள்ள விளை பொருள்களும் கைத்தொழில்களும்	25
	1. விளைபொருள்கள்	,,
	2. கைத்தொழில்	,,
19.	தாலூகாக்களும் முக்கிய ஊர்களும், அங்கே நடைபெறும் தொழில்களும்	28
	i. மதுரைத் தாலூகா	,,
	ii. திருமங்கலம் தாலூகா	30
	iii. பெரியகுளம் தாலூகா	31
	iv. கொடைக்கானல் தாலூகா	32
	v. பழனித் தாலூகா	,,
	vi. திண்டுக்கல் தாலூகா	33
	vii. நிலக்கோட்டைத் தாலூகா	34
	viii. மேலூர்த் தாலூகா	,,
20.	போக்கு வரவு சாதனங்கள்	35
	ரஸ்தா மார்க்கம்	42
	ரயில் மார்க்கம்	48
21.	வியாபாரம்	50
22.	சீதோஷ்ண நிலை; அதற்கும் தாவரங்களுக்கும் மனித வாழ்க்கைக்கும் உள்ள சம்பந்தம்	51

பூகோள சாஸ்திரம்

நான்காம் வகுப்பு

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
4 - JAN 1940
MADRAS

பொது விவரம்

முதல் பாடம்

எட்டுத் திசைகள்

பிள்ளைகளே, அதிகாலையில் நாம் படுக்கையை விட்டு எழுந்து வெளியே வந்து சூரியன் உதிப்பதைக் காண்கிறோம் அல்லவா? சூரியன் உதிக்கும் திசைக்குக் கிழக்கு என்று பெயர். நாம்



கிழக்குப் பக்கம் திரும்பி நின்றால், மற்றத் திசைகளைச் சுலபமாகத் தெரிந்துகொள்ளலாம். நமது முதுகு புறம் இருக்கும் திசை மேற்கு; வலக் கைப் புறம் தெற்கு; இடக்கைப்புறம் வடக்கு

இந்த நான்கு திசைகளுக்கும் இடையிடையே மூலையில் வேறு நான்கு திசைகளும் இருக்கின்றன. அவைகளுக்கு உப திசைகள் என்று பெயர். வடக்கு, கிழக்கு ஆகிய இவைகளுக்கு நடுவே வடகிழக்கும், கிழக்கு, தெற்கு ஆகிய இவைகளுக்கு நடுவே தென்கிழக்கும், தெற்கு, மேற்கு ஆகிய இவைகளுக்கு நடுவே தென் மேற்கும்,



திசைப் படம்

மேற்கு, வடக்கு ஆகிய இவைகளுக்கு நடுவே வட மேற்கும் உள. ஆகவே



திசை காட்டும் கருவியின் படம்

திசைகள் எட்டு. இத்திசைகளைச் சுலபமாகத் தெரிந்துகொள்ள ஒரு கருவி இருக்கிறது. அதற்குத் தமிழில் ''திசைகாட்டும் கருவி'' என்று பெயர். அதில் எட்டுத் திசைகளும் குறிக்கப்பட்டிருப்பதைப் பாருங்கள். அதன் மத்தியில் காந்த ஊசி அமைக்கப்பட்டிருக்கிறது. அது அசையும் தன்மை

யுடையது. அதன் ஒரு நுனி எப்பொழுதும் வடக்கையே நோக்கி நிற்கும். அதைக் கவனித்தால் மற்றத் திசைகளை இலகுவில் கண்டுபிடிக்கலாம்.

ஒரு தேசப்படத்தின் திசைகளை அறிவது எப்படி? படத்தைச் சுவரில் தொங்கவிட்டு, அதை நோக்கி ஒரு



தேசப்படத்தின் திசைகளை அறிதல்.

பையன் நின்றால், படத்தின் தலைப் பக்கம் வடக்கு; அடிப்பக்கம் தெற்கு; பையனது வலக் கைப்பக்கம் கிழக்கு; இடக் கைப்பக்கம் மேற்கு.

இரண்டாம் பாடம்

வெயில், மழை, மேகமுள்ள நாட்கள்

பிள்ளைகளே, ஒரு நாளில் பாதிப் பொழுது வெளிச்சமாக இருக்கிறது. அப்பொழுதைப் பகல் என்று சொல்லுகிறோம். பாதிப் பொழுது இருட்டாக இருக்கிறது. அப்பொழுதை இரவு என்று சொல்லுகிறோம். பகற் பொழுது சூரியனுடைய வெப்பத்தால் சூடாகவும், இராப் பொழுது சூரிய வெப்பம் தோற்றுததால் குளிர்ச்சியாகவு மிருக்கிறது. நீங்கள் காலையில் படுக்கையை விட்டு எழுந்திருக்கும் போது வெயில் அதிகமாக இருப்பதில்லை. அதேபோல் நீங்கள் மாலை வேளையில் பாடசாலையிலிருந்து வீட்டுக்குத் திரும்பும் போதும் அவ்வளவு வெயில் இல்லை யல்லவா? ஆனால் நடுப் பகலில் வெயில் மிகவும் அதிகமா யிருக்கிறதல்லவா? ஒவ்வொரு நாளிலும் இம்மாதிரி மாறுதல்களைக் காண்கிறோம்.

சில தினங்களில் நாம் சூரியனைப் பார்க்கமுடியாதல்லவா? ஏன்? அப்போது சூரியனை மேகங்கள் மறைத்துக் கொண்டிருக்கின்றன. இம்மாதிரிமேகமுள்ள நாட்களில் சூரியன் நமக்கு நன்றாய்த் தெரியாது. அந்தத் தினங்களில் வெயில் குறைவாக இருக்கிறது. ஆகையால் அந்த நாட்களில் நடுப்பகலில் பள்ளிக்கூடத்திலிருந்து வீட்டுக்குப் போகும் போதாவது, மறுபடி பள்ளிக்கூடத்துக்குப் போகும் போதாவது வெயில் சுடுவதில்லை அல்லவா?

வேறு சில தினங்களில் வெயிலே இருப்பதில்லை. அந்நாட்களில் ஆகாயத்தில் மேகங்கள் சூழ்ந்து கொண்டு மழைபெய்கின்றன. மழை நாட்களில் நீங்கள் பள்ளிக்கூடத்துக்குப் போவதும், சாயங்கால நேரங்களில் பந்து முதலியவை விளையாடுவதும் கஷ்டமாயிருக்கிறதல்லவா? சில நாட்களில் இம்மாதிரியான மாறுதல்களைக் காண்கிறோம்.

பயிற்சி

1. எட்டுத் திசைகள் எவை? அவைகளை நீ எப்படிக் கண்டு பிடிப்பாய்?

2. எந்தக் கருவியில் எட்டுத் திசைகளும் காட்டப்பட்டிருக்கின்றன?

3. ஒவ்வொரு நாளும் சீதோஷ்ண நிலை எவ்விதம் மாறுபடுகிறது?

(உபாத்தியாயருக்குக் குறிப்பு:—கீழ்க்கண்டவாறு உள்ளூரின் சீதோஷ்ணத்தைக் குறிக்கும் அட்டவணை யொன்று தயார் செய்து, அதை ஒவ்வொரு நாளும் வகுப்பில் பிள்ளைகளின் எதிரே பூர்த்தி செய்யவும். உதாரணமாக, முதல் தேதியன்று வெயில் அதிகமாயிருந்தால் வெயில் நாள் என்ற தலைப்பின் கீழ் முதல் தேதிக்கு நேரே × இம்மாதிரி அடையாளம் செய்யவும். பெரிய கடிதாசியில் ஒவ்வொரு மாதத்துக்கும் தனித்தனி அட்டவணை தயார் செய்து, வகுப்பில் பிள்ளைகள் பார்க்கும்படியாகச் சுவரில் தொங்கவிடவும். மாதக் கடைசியில் ஒவ்வொரு தலைப்பின் கீழும் எத்தனை நாட்கள் என்று குறிப்பிடவும்).

சீதோஷ்ண அட்டவணை

ஊரின் பெயர்...................... ....மாதம்

தேதி	வெயில் நாள்	மழை நாள்	மேகமுள்ள நாள்	காற்று அடிக்கும் நாள்

மூன்றும் பாடம்

பருவ காலங்கள்

முன் பாடத்தில் ஒவ்வொரு நாளும் காலையிலும், நடுப்பகலிலும், சாயங்காலத்திலும் வெயில் ஒரே மாதிரி இருப்பதில்லை என்றும், சில நாட்களில் வெயில் அதிகமாகவும், சில நாட்களில் குறைவாகவும், சில நாட்களில் குளிர் மிகுந்தும் சில நாட்களில் மழை மிகுந்தும் இருக்கின்றன என்றும் படித்தோமல்லவா? இம்மாதிரி ஒரு வருஷத்தில் ஏற்படும் மாறுபாடுகளுக்குப் பருவ காலங்கள் என்று பெயர்.

ஒரு வருஷத்திற்குப் பன்னிரண்டு மாதங்கள் அல்லவா? இப்பன்னிரண்டு மாதங்களையும் சீதோஷ்ண மாறுதல்களுக்குத் தக்கவாறு ஆறு பருவங்களாகப் பிரித்திருக்கிறார்கள். மழை அதிகமாய்ப் பெய்யு நாட்களைக் கார் காலம் என்றும், குளிர் அதிகமாக உள்ள நாட்களைக் குளிர் காலம் என்றும், குளிருடன் பனியும் இருக்கும் நாட்களைப் பனிக்காலம் என்றும், பனிக்காலத்தில் சில நாட்களில் முன் இரவில் பனி அதிகமாயுள்ள நாட்களை முன் பனிக்கால மென்றும், பின் இரவில் பனி அதிகமாயுள்ள நாட்களைப் பின் பனிக்காலமென்றும், வெயில் அதிகமாயுள்ள நாட்களை (கோடைக் காலம்) வேனிற்காலமென்றும், வேனிற்கால ஆரம்பத்தை இளவேனிற்கால மென்றும், வெயில் அதிகமான காலத்தை முது வேனிற் கால மென்றும் பிரித்திருக்கிறார்கள்.

அவை யாவன:—

சித்திரை, வைகாசி — இளவேனிற் [காலம்.

ஆனி, ஆடி — முதுவேனிற் காலம்.
ஆவணி, புரட்டாசி — கார் காலம்.
ஐப்பசி, கார்த்திகை — குளிர் காலம்.
மார்கழி, தை — முன்பனிக் காலம்.
மாசி, பங்குனி — பின்பனிக் காலம்.

வேனிற் காலத்தில் தாவரங்கள் தளிர் விடும். பூஞ்செடிகள் பூத்து வாசனை வீசும். இளவேனிற் காலத்தில் குடியானவர்கள் தேவதைகளுக்குப் பொங்கலிட்டு விழாக் கொண்டாடுவார்கள். கார் காலத்தில் பகலில் கடுவெயில் காயும். மாலையில் மழை பெய்யும். ஆறு குளங்களில் நீர் நிரம்பும். குளிர் காலம் வரை குடியானவர்கள் நிலங்களை உழுது விவசாயம் செய்வார்கள்; பனிக் காலத்தில் பயிர் அறுவடை செய்வார்கள்.

பயிற்சி

1. நமது ஜில்லாவில் எந்த மாதங்களில் உஷ்ணம் அதிகமாயிருக்கிறது ?

2. எந்த மாதங்களில் குளிர்ச்சி அதிகமாயிருக்கிறது ?

3. பருவங்களின் பெயரையும் ஒவ்வொன்றுக்குரிய மாதங்களின் பெயரையும் சொல்லு.

நான்காம் பாடம்

வாயு, காற்று



நாம் வசிக்கும் பூமியைச் சுற்றி வாயு வியாபித்திருக்கிறது. அதை நாம் கண்ணால் பார்க்க முடியாது. ஆனால் அது நம் மேல் வீசும் போதும், மரம், இலைகள் முதலியன அசையும்போதும், அதன் செய்கையை யறிந்து கொள்ளலாம். மனிதர்கள், பிராணிகள், செடி, கொடிகள் முதலியன வாயு இல்லாவிட்டால் ஒரு நிமிஷமும் வாழ முடியா.

தண்ணீர் மேடான இடத்திலிருந்து பள்ளத்திற்கு ஓடுகின்றதல்லவா? அதே போல வாயுவும் ஓர் இடத்திலிருந்து மற்றோர் இடத்திற்கு வீசுகின்றது. பொதுவாக, குளிர்ந்த இடத்திலிருந்து உஷ்ணமான இடத்திற்கு வாயு வீசுகின்றது. இப்படி ஓர் இடத்திலிருந்து மற்றோர் இடத்திற்கு வீசும் வாயுவுக்குக் காற்று என்று பெயர். மெல்லிய காற்றை மந்த மாருதம், தென்றல் என்றும், பலமாக வீசும் காற்றைப் புயல், சூறவளி என்றும் சொல்லுவார்கள்.

காற்று நமக்கு அதிக உபயோகமுள்ளது. கோடைக் காலங்களில் இரவில் அதிகப் புழுக்கமாயிருக்கும்பொழுது, நம்மீது குளிர்ந்த காற்று வீசினால் நமக்கு எவ்வளவு சுகமாயிருக்கிறது! காற்றினால் நமக்கு மற்றோர் உபயோகமும் உண்டு. காற்று, மேகங்களைத் தள்ளிக்கொண்டு வந்து, நமக்கு மழையைக் கொடுக்கும்படிசெய்கிறது.



காற்றின் திசைகாட்டும் கருவி

நாம் தெருவில் நிற்கும்போது காற்று வீசினால், அது எந்தத் திசையிலிருந்து எந்தத்திசைக்குவீசுகின்றது என்பதை யறியலாம். அன்றியும் இங்குப் படத்தில் காட்டியுள்ளது

போல் ஓர் கருவி இருக்கிறது. அதில் மேலே காட்டியுள்ள அம்பு போன்ற பாகம் சுலபமாகச் சுற்றக் கூடியது. கீழே காட்டியிருக்கும் நான்கு திசைகளின் அடையாளங்களும் நகராதவை. காற்று வீசும்போது, அது எந்தத் திசையை நோக்கி வீசுகின்றதோ அந்தத் திசையை நோக்கி அம்பு திரும்பும். அப்பொழுது கீழே குறிப்பிட்டிருக்கும் திசைகளின் உதவியால் காற்று எப்பக்கம் வீசுகிற தென்பதையறியலாம்.

(உபாத்தியாயருக்குக் குறிப்பு:— படத்தில் காட்டியுள்ளபடி காற்றுத் திசை காட்டும் கருவி யொன்றை அட்டை அல்லது தகரத்தில் செய்து, ஓர் மூங்கிலைக் கீழே நட்டு, அதன் நுனியில் இக்கருவியைக் கட்டி, அது சுற்றுவதைப் பிள்ளைகளுக்குக் காண்பிக்கவும்).

பயிற்சி

1. காற்று நமக்கு எவ்விதம் உபயோகப்படுகிறது?

2. காற்று எந்தத் திசையை நோக்கி வீசுகின்ற தென்பதை எப்படி யறிந்து கொள்ளலாம்?

ஐந்தாம் பாடம்

தண்ணீர் நீராவியாகுதல்

சிறுவர்களே, உங்கள் வீட்டில் சோறு சமைப்பதற்காக உலை வைக்கிறார்கள் அல்லவா? அதாவது ஓர் பாத்திரத்தில் தண்ணீரை ஊற்றி, அதை அடுப்பின் மேல் வைத்து, அடுப்பில் நெருப்பிட்டு எரிக்கிறார்கள் அல்லவா? கொஞ்ச நேரத்துக்குப் பிறகு என்ன நடக்கிற தென்பதைக் கவனித் திருக்கிறீர்களா? பாத்திரத்தின்மீது படும் நெருப்பின் உஷ்ணம் அதிகரிக்கவே, பாத்திரத்திலிருந்து ஓர் புகை கிளம்புகிறது. இந்தப் புகைக்கு நீராவி என்று பெயர்.



உஷ்ணம் இன்னும் அதிகரித்துக் கொண்டே போனால் கொஞ்ச நேரம் பொறுத்துப் பாத்திரத்தில் தண்ணீரே இல்லாமல் போய்விடுகிறது. அவ்வளவு தண்ணீரும் எங்குப் போயிற்று? எல்லாம் நீராவியாகப் போய்க் காற்றில் கலந்துவிட்டது.

இவ்விதமே, சூரிய உஷ்ணத்தினால் கடல், ஆறு, ஏரி ஆகிய இவைகளில் உள்ள தண்ணீர் ஆவியாக மாறுகிறது. வெயிற் காலத்தில் ஏரி, குளம் முதலியவை வறண்டு போவதற்கு இது ஒரு முக்கிய காரணம்.

பயிற்சி

1. ஆறு, குளங்களிலுள்ள தண்ணீர் வற்றிப் போவதின் காரணம் என்ன?

2. அடுப்பின் மீது ஒரு பாத்திரத்தில் தண்ணீர் விட்டுக் காய்ச்சினால் மேலே என்ன தெரியும்? அதற்குப் பெயர் என்ன?

ஆறும் பாடம்

மழையும் அதன் செய்கையும்

ஓர் கெட்டிலில் தண்ணீர் ஊற்றி, அதை அடுப்பின்மீது வைத்துக்காய்ச்சினால், கொஞ்ச நேரம் சென்றதும், கெட்டிலின் மூக்கிலிருந்து நீராவி வரும்.



அதற்கு நேராக ஓர் சிலேட்டைப் பிடியுங்கள். கொஞ்ச நேரம் பொறுத்துச் சிலேட்டைக் கவனித்துப்பார்த்தால், அதில் துளி துளியாகத் தண்ணீர் காணப்படும். இந்தத் தண்ணீர் எங்கிருந்து வந்தது? கெட்டிலிலுள்ள தண்ணீர் நீராவியாக மாறிற்று அல்லவா? சிலேட்டைத் தொட்டால் அது மிகவும் குளிர்ச்சியாக இருக்கும். ஆகையால் குளிர்ச்சியான சிலேட்டில் நீராவி பட்டவுடன் அது தண்ணீர்த் துளிகளாக மாறி விட்டது.

மாறுகிறது. மேகங்கள் ஆகாயத்தில் வேகமாகச் செல்வதைக் கவனித்திருக்கிறீர்களா? இதற்குக் காரணம் அவை காற்றினால் அடித்துக்கொண்டு போகப் படுவதே யாகும். அவை மேலே செல்லும் பொழுது அவைகளின் மேல் குளிர்ந்த காற்றுப் படுகிறது. அப்பொழுது, அவை மழையாகப் பூமியில் விழுகின்றன.

மலையுச்சிகளும் மர மடர்ந்த காடுகள்உள்ள இடங்களும் குளிர்ச்சியாக இருக்கும். ஆதலால் அங்கே மழை அதிகமாகப் பெய்கிறது. இப்படி விழும் மழையை ஓர் கருவியினால் அளப்பது வழக்கம். அக்கருவிக்கு



மழை மானி

'மழைமானி' என்று பெயர். அப்படி அளந்து, ஓர் இடத்தில் இவ்வளவு அங்குலம் மழை பெய்கிறது என்று சொல்லுவ துண்டு. அதையே சிலர் இவ்வளவு "சுழி" அல்லது "செவி" மழை என்றும் சொல்லுவார்கள்.



அதேமாதிரி சூரியனுடைய உஷ்ணத்தினால் ஆறு, ஏரி, கடல் ஆகிய இவைகளில் உள்ள தண்ணீர் நீராவியாக மாறி, மேலே சென்று மேகமாக

பூமியின் மேல் மழையாக விழும் தண்ணீர் என்னவாகிறது? மழை நின்றவுடன் நாம் வெளியே சென்று பார்த்தால் இதை யறியலாம். பள்ள

மாயிருக்கும் இடங்களில் தண்ணீர் தேங்கிச் சிறு குட்டைகளாகக் காணப் படுகிறது. மேட்டுப் பிரதேசங்களில் பெய்யும் மழைத் தண்ணீர் பள்ளங் களை நோக்கிச் சிறு கால்வாய்களாக ஓடுகிறது. அப்படி ஓடும் பொழுது வழியிலுள்ள மண் முதலியவைகளை அறுத்துச் செல்வதால், தண்ணீர் ஓடுமிடம் சற்றுப் பள்ளமாகி விடுகி றது. பல சிறு கால்வாய்கள் ஒன்ருகச் சேர்ந்து ஓர் பெரிய கால்வாயாக ஓடு கிறது. இரண்டு கால்வாய்கள் ஒன்று சேருமிடத்தில், தண்ணீர் வற்றிய வுடன் விசிறிபோல் ஓர் மணல் மேடு இருப்பதைக் காண்கிருேம். இங்குக் கால்வாய் பல பிரிவுகளாகப் பிரிகின் றது. இதற்கு "டெல்டா" என்றுபெயர்.

மழை நமக்கு அதிக உபயோக மானது. மழையினுல் ஆறு, குளங் கள் ஆகிய இவைகளில் தண்ணீர் நிறைகிறது. அத் தண்ணீர் பயிர் செய்ய உபயோகப் படுகிறது. பயிர்த் தொழில் விருத்தி யடைந்தால் ஜனங் கள் சந்தோஷமாக வாழ முடியும். மழையினுல் நமக்குச் சாப்பிடுவதற் கும், குளிப்பதற்கும் தண்ணீர் கிடைக் கிறது.

(உபாத்தியாயருக்குக் குறிப்பு:—மழை பெய்தவுடன் குழந்தைகளை வெளியே அழைத்துச் சென்று, மேலே சொன்ன விஷ யங்களை விளக்கிக் காட்டவும்).

பயிற்சி

1. மேகம் என்பது என்ன?
2. மழை எவ்வாறு உண்டாகிறது?
3. தண்ணீர் எவ்விதம் ஓடுகிறது?
4. மழையை எந்தக் கருவியினுல் அளக்கிருேம்?
5. டெல்டா என்ருல் என்ன?
6. மழையினுல் நமக்கு என்ன உப யோகம்?

ஏழாம் பாடம்

கடலும் கடற் பிரயாணமும்

கடல் என்பது ஓர் பெரிய நீர் நிலை. இது எல்லா நாடுகளையும் சுற்றி வியாபித்திருக்கிறது. இதன்



எதிர்க்கரை நம் கண்ணுக்குத் தெரிவ தில்லை. இதிலிருக்கும் தண்ணீர் அதிக உப்பாக இருக்கும். எனவே அதை நாம் சாப்பிடவாவது, பயிர் களுக்குப் பாய்ச்சவாவது முடியாது. சில இடங்களில் இத்தண்ணீரைப் பாத்திகளில் பாய்ச்சி, பல தினங்கள் அப்படியே விட்டு வைக்கிருர்கள். சூரிய வெப்பத்தினுல் தண்ணீர் ஆவி யாகப் போன பிறகு, பாத்தியில் உப்புத் தங்கிவிடுகின்றது. இதை உடைத் துக் கோணிகளில் கட்டி, கடை களுக்கு அனுப்புகிருர்கள்.

கடல் அதிக ஆழமாக இருப்ப தால், அதன் தண்ணீர் நம் கண் ணுக்கு நீல நிறமாகத் தோன்று கிறது. கடற்கரை பெரும்பாலும் மணற் பாங்கானது கரையின் மீது எப்போதும் அலைகள் மோதிக்கொண் டே இருக்கின்றன. அதனுல் கடற் கரை அரிக்கப்பட்டு, வளைகுடா, விரி குடா, தீவு, பூசந்தி, ஜலசந்தி முதலி யன உண்டாகின்றன.

கடலில் பலவித மீன்கள் ஏராளமாக இருக்கின்றன. அவற்றைப் பிடிப்பதற்காக, செம்படவர்கள் சிறு



படகு

படகுகளில் ஏறிக்கொண்டு கடலில் வெகு தூரம் செல்கிறார்கள்; சில சமயங்களில் பல மரத் துண்டுகளை ஒன்றாகக் கட்டி, அவைகளிலும் மீன் பிடிக்கச் செல்கிறார்கள். இதற்குக் 'கட்டு மரம்' என்று பெயர்.



கட்டுமரத்தில் ஏறி மீன் பிடித்தல்

ஒரு தேசத்திலிருந்து மற்றொரு தேசத்திற்கு ஜனங்கள் செல்லுவதற்கும், சாமான்களை ஏற்றிச் செல்லுவதற்கும் கப்பல்கள் உபயோகப்படுகின்றன. முற்காலங்களில் கப்பல்க



பாய்க் கப்பல்

ளில் பெரிய பாய்மரங்களைக் கட்டுவார்கள். காற்று, பாய்களின்மேல் வீசும் போது கப்பல் நகர்ந்து செல்லும். ஆனால் இதில் பிரயாணம் செய்வோர் விரும்பிய இடங்களை அடைவதற்குப் பல மாதங்கள் பிடிக்கும்.

இக்காலத்தில் ரயில் வண்டிகள் நீராவியினால் செல்வதுபோல், கப்பல்களும் நீராவியினால் செல்கின்றன. இதோ பாருங்கள் நீராவிக் கப்பல். இதனால் அதி சீக்கிரம் பிரயாணம் செய்ய முடிகின்றது.



நீராவிக் கப்பல்

இப்பொழுது நமது தேசத்துக்கு அயல் நாடுகளிலிருந்து வரும் சாமான்கள் நீராவிக் கப்பலிலேயே வருகின்றன. நம் நாட்டிலிருந்து அயல் நாடுகளுக்கு அனுப்பும் சாமான்களும் இதன் மூலமாகவே அனுப்பப்படுகின்றன.



துறைமுகம்

கடற்கரை ஓரமாக அதிக ஆழமாகவும் பத்திரமாகவும் உள்ள இடத்

திற்குத் துறைமுகம் என்று பெயர். இவ்விடத்தில் கப்பல்கள் வந்து தங்குவதற்கும், அதில் சாமான்கள் ஏற்றுவதற்கும், ஜனங்கள் ஏறுவதற்கும், அதிலிருந்து ஜனங்கள் இறங்குவதற்கும், சாமான்கள் இறக்குவதற்கும் வசதியாகத் துறைமுகம் கட்டப்பட்டிருக்கிறது. கடலில் உண்டாகும் பெரிய அலைகள் துறைமுகத்திற்குள் வாரா. புயல் காற்றினுல் கப்பல்களுக்குச் சேதமும் உண்டாகாது. எனவே இங்கு வியாபாரம் விசேஷமாக நடக்கின்றது.



தீப ஸ்தம்பம்

இரவில் கப்பல்கள் பிரயாணம் செய்யும்போது துறைமுகம் தெரிவதற்காக, தீபஸ்தம்பங்கள் கட்டியிருக்கிறுர்கள். இரவு நேரங்களில் அவைகளில் விளக்குகள் பிரகாசமாக எரிகின்றன.

கடலின் மத்தியிலும் சில இடங்களில் பாறைகள் இருக்கின்றன. கப்பல்கள் அவைகளில் மோதினுல் உடைந்து போகுமல்லவா? ஆகவே இரவு நேரங்களில் பாறைகள் இருப்பது கப்பலோட்டிகளுக்குத் தெரிவதற்காக, அப்பாறைகளிலும் தீபஸ்தம்பங்கள் கட்டியிருக்கிறுர்கள்.

(உபாத்தியாயருக்குக் குறிப்பு:— கடல், துறைமுகங்கள், தீபஸ்தம்பங்கள், கட்டுமரம், பாய்மரக் கப்பல், நீராவிக் கப்பல், அக்கப்பலின் உட்பாகம், கப்பலில் சாமான்கள் ஏற்றுதல், இறக்குதல் முதலிய படங்களைச் சேகரித்துப் பிள்ளைகளுக்குக் காண்பிக்கவும்).

பயிற்சி

1. கடலில் உள்ள தண்ணீர் நாம் சாப்பிடவும் வயல்களுக்குப் பாய்ச்சவும் உபயோகமாவதில்லை; ஏன்?

2. கடலிலிருந்து உப்பு எப்படிச் செய்கிறுர்கள்?

3. முற்காலத்தில் கப்பல்கள் எப்படிப் பிரயாணம் செய்தன? இக்காலத்தில் எப்படிப் பிரயாணம் செய்கின்றன?

4. துறைமுகம் என்றுல் என்ன ?

5. தீபஸ்தம்பங்களின் உபயோகம் என்ன?

எட்டாம் பாடம்

கிராமமும் நகரமும்

(இரண்டு பிள்ளைகளுக்குள் சம்பாஷணை)

சீனிவாசன்:- கோபாலா, இவ்வருஷம் கோடை விடுமுறைக்கு நீ கட்டாயம் எங்கள் ஊருக்கு வரவேண்டும்.

கோபாலன்:—உங்கள் ஊருக்கா! அது சிறு கிராமமாயிற்றே. அங்கு விநோதம் ஒன்றும் இருக்காதே; எப்படிப் பொழுது போகும்?

சீ:—ஓகோ! நீ அவ்விடம் ஒரு தடவை வந்து பார்த்தால், பிறகு அதன் அருமையை யறிந்து கொள்வாய். எங்கள் கிராமம் உங்கள் நகரத்தைவிட மிகவும் சிறந்ததே.

கோ:—அடேயப்பா! உங்கள் கிராமத்தில் அப்படிச் சிறந்தவைகள் என்ன இருக்கின்றன? எங்கள் நகரத்தைப் பார். எவ்வளவு பெரிய வீடுகள்! விசாலமான தெருக்கள், எத்தனை விதமான வாகனங்கள்! ஒற்றை

மாட்டுவண்டி, சைக்கில்வண்டி, ஜட்கா வண்டி, கோச்சு வண்டி, மோட்டார் கார், மோட்டார் பஸ்ஸுகள் இருக்கின்றனவே! சற்று நேரம் இவற்றைப் பார்த்துக் கொண்டிருந்தாலும் பொழுது போய் விடுமே!



கிராமம்

சீ:—எங்கள் கிராமத்தில் இவை இல்லை தான். கிராமத்திலுள்ளவர்களுடைய தொழில் விவசாயம் மட்டும்தான். அவர்களுக்கு வருமானம் குறைவு. அவர்கள் ஏழைகள்; சிறுவீடுகள்தான் கட்டிக்கொண்டிருப்பார்கள். ஆனாலும் நெருக்கமாகக் கட்டப்பட்டுள்ள பெரிய வீடுகளுக்குப் பதிலாகக் காற்றோட்டமாயும் ஒன்றுக்கொன்று இடைவெளி விட்டும் கட்டப்பட்டுள்ள பல சிறு வீடுகள் இருக்கின்றன. தெருவில் மாட்டு வண்டிகள் மட்டும் தான் செல்கின்றன. ஆனால் இவை உங்கள் நகரத்து வாகனங்களைப் போல, சதா ஓடிக்கொண்டு சத்தத்தையும், புழுதியையும் கிளப்பி விட்டுத் தேக சுகத்தைக் கெடுக்கவில்லையே!

கோ:— எங்கள் நகரங்களில் தெருக்கள் எவ்வளவு சுத்தமாயிருக்கின்றன தெரியுமா? கிராமங்களில் சுகாதார முறைகளை யனுசரிக்காமல், கண்ட இடங்களில் குப்பை, கூளங்களைப் போட்டு, அசுத்தமாக்கி விடுகிறார்களே.

சீ:— கிராமங்களில் சுகாதாரக் குறைவு சற்று இருந்தது வாஸ்தவமே. ஆனால் ஜனங்கள் இப்பொழுது சுகாதார மின்மையின் தீங்குகளைத் தெரிந்து கொண்டு, தக்க முயற்சிகள் எடுத்து வருகிறார்களே. துரைத்தனத்தாரும் இப்பொழுது கிராம முன்னேற்றத்திற்காகப் பலவாறு பாடுபட்டு வருகின்றனர். ஆகையால் கூடிய சீக்கிரம் கிராமங்கள் இவ்விஷயத்தில் சீர் திருத்தமடைந்துவிடும். தவிர, கிராமங்களில், அழகான பயிர் பச்சைகளையும், சூரிய உதயம், அஸ்தமனம் முதலிய காட்சிகளையும், பக்ஷிகள் இனிமையாகப்பாடுதல் முதலிய இயற்கையழகையும் அனுபவிக்கலாமே. நகரங்களில் இது முடியுமா?



நகரம்

கோ:— நகரங்களில் இயற்கையழகு இல்லாவிட்டால் செயற்கையழகு இருக்கின்றதே. சாயங்கால

நேரத்தில் காற்று வாங்க, "பார்க்" என்ற சிங்காரத் தோட்டங்கள் இருக்கின்றனவே. அவற்றில் "ஒலி பரப்பி" என்ற விசித்திரமான கருவியமைத்து, பல இடங்களிலிருந்து இனிமையான சங்கீதம், பல நாடுகளிலிருந்து வர்த்தமானங்கள், விலைவாசிகள் ஆகிய இவற்றைக் கேட்க வசதி செய்திருக்கிறார்களே! இரவு நேரங்களில் மின்சார சக்தியினால் விளக்குகள் ஏற்றியிருப்பதைக் காண வெகு அழகாயிருக்குமே! சந்தோஷமாகப் பொழுது போக்கச் சினிமா, டிராமா ஆகிய இவைகளும், குடிக்க நல்ல தண்ணீர்க் குழாய்களும், அறிவை விருத்தி செய்து கொள்ள உயர்தரக் கலா சாலைகள், வாசக சாலைகள் முதலியனவும் இருக்கின்றனவே. தவிர நோயாளிகளுக்காக வைத்திய சாலைகளும், ஜனங்கள் வழக்குகளைத் தீர்க்கக் கச்சேரிகளும் இருக்கின்றன.

சீ:—வாஸ்தவமே. ஆனால் மின்சார விளக்குகளின் அதிக வெளிச்சத்தாலும், சினிமா காட்சிகளைப் பார்ப்பதாலும் சீக்கிரம் கண்கள் கெட்டுவிடுகின்றனவே. எங்கள் கிராமங்களில் காலை, மாலை வேளைகளில் வயற் புறங்களில் உலாவி, பசுமையான பயிர், செடி முதலியவைகளைப் பார்ப்பதால் கண்ணுக்குக் குளிர்ச்சியும், உடம்பிற்கு ஆரோக்கியமும் ஏற்படுகின்றனவே.

கோ:—நகரத்திலுள்ள ஜனங்கள் எப்பொழுதும் சுறுசுறுப்புள்ளவர்களாக இருக்கிறார்களே. கிராமத்தவர்கள் வருஷத்தில் பல நாட்களில் சோம்பலாகக் காலங் கழிக்கிறார்களே! நகரத்தவர்கள் கிராமத்தவர்களுக்கு வேண்டிய துணிகள், கண்ணாடிச் சாமான்கள், புத்தகங்கள் முதலியன செய்து அனுப்பா விட்டால் அவர்கள் என்ன செய்வார்கள்?

சீ:—பயிரிடும் நாட்களில் ஆண், பெண், குழந்தைகள் ஆகிய எல்லோரும் கிராமங்களில் அதிக சுறுசுறுப்பாயிருக்கிறார்களே. மற்ற நாட்களிலும் அவர்கள் ஏதாவது ஒரு தொழிலை நடத்தும்படி சர்க்கார் முயற்சித்து வருகிறார்கள். உங்கள் நகரவாசிகளுக்கு வேண்டிய ஆகாரம் முக்கியமாகக் கிராமங்களி லிருந்து வருகிறதென்பதை நீ மறக்கக் கூடாது. மேலும், நீங்கள் துணிகள் நெய்யப் பஞ்சும் கிராமங்களிலிருந்தே வருகிறது. எனவே, நாங்கள் உழைக்கா விட்டால் நீங்கள் வாழ முடியாது. மேலும் நாள் முழுதும் வெளிகளில் உழைத்து, சுத்தமான காற்றையும், சாதாரண ஆகாரத்தையும், சுத்த நீரையும் உட்கொண்டு கிராம வாசிகள் நோயற்று எவ்வளவு பலசாலிகளாயிருக்கிறார்கள்! நகர வாசிகள் வீடுகளிலேயே அடைபட்டு, புழுதியையும், சாக்கடை நாற்றம் கலந்த காற்றையும், பலவித ஆகாரங்களாகிய காப்பி, தேயிலை முதலியவற்றையும் உட்கொண்டு, நோய்வாய்ப்பட்டுப் பொதுவாகப் பலவீனர்களா யிருக்கின்றனரே தெரியாதா?

கோ:—வாஸ்தவமே. யோசிக்குமிடத்து, கிராமமும் நகரமும் வெவ்வேறு விதங்களில் சிறந்தவைகளே. தேசம் முன்னேற்ற மடைய ஒன்றுக் கொன்று ஒத்துழைத்தல் அவசியமே. நான் விடுமுறை நாட்களில் அவசியம் உன்னுடன் கிராமத்திற்கு வந்து, அங்குள்ள காட்சிகளைக் கண்டு களிக்கிறேன். வந்தனம்.

சீ:—சந்தோஷம். வந்தனம்.

(உபாத்தியாயருக்குக் குறிப்பு:— கிராமம், நகரம் ஆகிய இவற்றைக் குறித்துப் பிள்ளைகளை அதிகமாகச் சம்பாஷணை செய்யும்படி செய்யவேண்டும்).

பயிற்சி

1. கிராமத்தில் வசிப்பவர்களின் முக்கியமான தொழில் யாது?

2. பட்டணத்திற்கும் கிராமத்திற்கும் உள்ள வித்தியாசத்தைச் சொல்லு.

3. கிராமவாசிகளின் வீடு எவ்வாறு உள்ளது?

4. பட்டணத்தில் என்னென்ன வண்டிகளைக் காணலாம்?

ஒன்பதாம் பாடம்

எங்கு, எவ்விதம் நகரங்கள் உண்டாகின்றன?

நகரங்களில் உள்ள ஜனங்களின் முக்கியமான தொழில்கள் வியாபாரமும் பலவிதக் கைத்தொழில்களும் ஆகும்.

சாதாரணமாக, பல சாலைகள், இருப்புப் பாதைகள் சந்திக்குமிடத்தில் நகரங்கள் ஏற்படுகின்றன. ஏனெனில் பல திக்குக்களிலிருந்தும், ஜனங்கள் வியாபாரத்திற்கும் கைத்தொழிலுக்கும் அங்கு வந்து கூடுகின்றனர்.

கடற்கரைக்கு அருகில் ஆழமாகவும் பத்திரமாகவும் உள்ள இடங்களில் துறைமுகங்கள் ஏற்படுகின்றன என்று படித்தோமல்லவா? அங்கு வெளி நாடுகளிலிருந்து கப்பல்கள் வந்து சேருவதால், வியாபாரம் விருத்தியடைகிறது. எனவே அவ்விடங்களிலும் நகரங்கள் ஏற்படுகின்றன.

ஆற்றங்கரைகளிலும் நகரங்கள் ஏற்படுகின்றன. ஏனெனில் இப்பிரதேசம் செழிப்பாயிருப்பதோடு, குடிப்பதற்குத் தண்ணீர் சுலபமாகக் கிடைக்கிறது. போக்குவரவு மார்க்கங்களும் சுலபமாயிருக்கும்.

பெரிய கோயில் முதலியவைகள் உள்ள புண்ணிய ஸ்தலங்களும் நகரங்களாக விருத்தியடைகின்றன. ஏனென்றால் சுவாமி தரிசனம் செய்யவும் திருவிழாக்கள் பார்க்கவும் ஜனங்கள் அங்கு வந்துகொண்டேயிருப்பார்கள்.

பல கைத்தொழில்கள் நடக்குமிடங்களும் பெரிய நகரங்களாக ஆகின்றன.

பயிற்சி

1. நகரங்கள் எங்கே உண்டாகின்றன?

2. துறைமுகங்களில் நகரங்கள் உண்டாவது ஏன்?

3. புண்ணிய ஸ்தலங்கள் நகரங்கள் ஆவது ஏன்?

பத்தாம் பாடம்

கிராமங்களிலும் நகரங்களிலும் ஜனங்களின் வாழ்க்கையிலுள்ள வித்தியாசங்கள்

கிராமத்தைச் சுற்றிப் புல்வெளிகளும் வயல்களும் விசேஷமாக இருக்கின்றன அல்லவா? இதனால் கிராமத்தில் வசிக்கும் ஜனங்களில் பெரும்பாலோர் பயிரிடுதல், ஆடு மாடுகள் மேய்த்தல் முதலிய தொழில்களை நடத்துபவர்களாகவே இருக்கிறார்கள். இவர்கள் வாழ்க்கையும் ஆடம்பரமில்லாதது. பயிர்த் தொழிலுக்கு வேண்டிய கலப்பை முதலியவை

செய்யத் தச்சர்களும், மண்வெட்டி, அரிவாள் முதலியவைகள் செய்யக் கருமார்களும் இருப்பார்கள். இவர்களைத் தவிர, நாவிதர்கள், வண்ணார், தட்டார், குயவர் ஆகிய இவர்களும் இருப்பார்கள். இவர்களின் தொழில்கள் என்ன? சில கிராமங்களில் துணி நெய்யச் சேணியர்களும் இருப்பார்கள். நிலத்தை உழுது நாற்று நடுங்காலத்திலும், அறுவடைக் காலத்திலும் அவர்களுக்கு வேலை அதிகம். மற்ற நாட்களில் அவர்களுக்கு அதிக வேலை கிடையாது. கிராம தேவதைகளின் திருவிழாக் காலத்திலும் சங்கராந்தி (பொங்கல்) காலத்திலும் அவர்கள் அதிக உற்சாகமும் சந்தோஷமுமுள்ளவர்களாக இருப்பார்கள்.

நகரங்களில் வசிப்பவர்கள் பல தொழில்களை நடத்துபவர்களாக இருக்கிறார்கள். சிலர் ஆபீசுகளில் உத்தியோகஸ்தர்களாகவும், சிலர் வியாபாரிகளாகவும், சிலர் பெரிய கைத்தொழில்களை நடத்துபவர்களாகவும் இருப்பார்கள். சிலர் ஹோட்டல்கள் வைத்தும், சிலர் வண்டி, மோட்டார் ஆகிய இவற்றை ஓட்டியும், சிலர் தையல் வேலைகள் செய்தும் பிழைக்கிறார்கள். நகரத்திலுள்ளவர்களில் பெரும்பாலானவர்கள் ஆடம்பர வாழ்க்கையையே நடத்துபவர்களாக இருக்கிறார்கள். அவர்கள் எக்காலத்திலும் பொதுவாகச் சுறுசுறுப்புள்ளவர்கள்.

பயிற்சி

1. கிராமத்தில் வசிக்கும் ஜனங்களின் முக்கியமான தொழில்கள் எவை?

2. நகரங்களில் வசிக்கும் ஜனங்களின் முக்கியமான தொழில்கள் எவை?

3. நகரவாசிகள் எவ்வித வாழ்க்கையுள்ளவர்கள்?


நிலக்கடலை


கம்பு


சோளம்


கேழ்வரகு

பதினோராம் பாடம்

உள்ளூரில் விளையும் அறுவடைத் தானியங்கள்

உங்கள் ஊரைச் சுற்றிலும் வயல்கள் இருக்கின்றன அல்லவா? இவற்றில் பலவிதமான பயிர்கள் உண்டாகின்றன. நெல், வாழை, கரும்பு முதலியன விளையும் நிலத்திற்கு நன்செய் நிலமென்றும், கம்பு, சோளம், கேழ்வரகு முதலியவை விளையும் நிலத்திற்குப் புன்செய் நிலமென்றும் பெயர். நன்செய் நிலங்களுக்குச் சத்து உண்டாக்கச் சாம்பல், குப்பை, சாணி, தழைகள் முதலியவைகளை எருக்களாகப் போடவேண்டும். ஆறுகள், ஏரிகள்,

மதுரை ஜில்லாவின் விளை பொருள்களும், அவைகள் பயிர் செய்யப்படும் மாதங்களும்

ஜனவரி	பிப்ரவரி	மார்ச்	ஏப்ரல்	மே	ஜூன்	ஜூலை	ஆகஸ்டு	செப்டம்பர்	அக்டோபர்	நவம்பர்	டிசம்பர்
நெல்		நெல்	நெல்	நெல்		நெல்	நெல்	நெல்	* நெல்	*நெல்	நெல்
	சோளம்	சோளம்	சோளம்				* சோளம்	சோளம்			
					*கேழ்வரகு	*கேழ்வரகு	கேழ்வரகு				
							* கம்பு	கம்பு			
							* வரகு	வரகு			
							*சாமை	* சாமை			
*கோதுமை (கொடைக் கானல்)											
			நிலக்கடலை				*நிலக்கடலை				*நிலக்கடலை
			எள்ளு	எள்ளு			எள்ளு	எள்ளு	எள்ளு		*எள்ளு
								பருத்தி	*பருத்தி		
								கொள்ளு	*கொள்ளு		
* புகையிலை											*புகையிலை

* இக்குறிப்புள்ளவை அம்மாதங்களில் விசேஷமாய்ப் பயிர் செய்யப்படுகின்றன

குளங்கள், கிணறுகள் ஆகிய இவைகளிலிருந்து, கால்வாய்கள் வழியாக வயல்களுக்குத் தண்ணீர் பாய்ச்ச வேண்டும். நன்செய்ப் பயிர்களுக்கு எப்பொழுதும் தண்ணீர் வேண்டும். சாரமுள்ள களிமண் பூமியில் நன்செய்ப் பயிர்கள் விசேஷமாக உண்டாகின்றன.

புன்செய் நிலங்களில் கம்பு, சோளம், கேழ்வரகு, நிலக்கடலை, எள், உளுந்து, பயறு, துவரை முதலிய தானியங்கள் விளைகின்றன. இவைகள் சாதாரணமாக மேட்டுப் பாங்கான இடத்தில் பயிரிடப்படுகின்றன. இவைகளுக்குத் தண்ணீரும் அதிகமாக வேண்டியதில்லை. செம்மண், மணல் கலந்த மண்ணில் இவைகள் விசேஷமாகப் பயிராகின்றன. கம்பு, சோளம், கேழ்வரகு ஆகிய இவைகள் ஏழை ஜனங்களுக்கு ஆகாரமாக உபயோகப்படுகின்றன. நிலக்கடலை, எள் ஆகிய இவைகளிலிருந்து எண்ணெய் எடுக்கிறார்கள்.

நமது ஜில்லாவில் நெல், சோளம், கேழ்வரகு, கம்பு, வரகு, சாமை ஆகிய தானியங்களும், நிலக்கடலை, எள்ளு ஆகிய எண்ணெய் வித்துக்களும், பயறுகளும், கரும்பு, கொள்ளு, புகையிலை முதலியவைகளும் பயிர் செய்யப்படுகின்றன. அவைகள் ஒவ்வொன்றும் பயிர் செய்யப்படும் மாதங்களின் விவரங்களை 14ம் பக்கத்திலுள்ள அட்டவணையிற் காண்க:—

பயிற்சி

1. புன்செய்ப் பயிர்கள் எவை? நன்செய்ப் பயிர்கள் எவை?

2. உங்கள் கிராமத்தில் என்னென்ன தானியங்கள் விளைகின்றன?

3. நன்செய் விவசாயத்துக்குச் செய்ய வேண்டியதென்ன?



ஒற்றை மாட்டு வண்டி



இரட்டை மாட்டு வண்டி



குதிரை வண்டி



மோட்டார்



மோட்டார் பஸ்



மோட்டார் லாரி

பன்னிரண்டாம் பாடம்

போக்து வரவு மார்க்கங்கள்

சாதாரணமாக ஒரு கிராமத்திலிருந்து, சமீபத்திலுள்ள மற்றொரு கிராமத்திற்குப் போகவேண்டியிருந்தால், நடந்து செல்லுகிறோமல்லவா? இப்படியே ஜனங்கள் நடந்து நடந்து பாதை தேய்ந்து போகிறது. இதற்கு ஒற்றையடிப் பாதை என்று

பெயர். சற்றுத் தூரத்திலுள்ள கிராமத்துக்குப் போகவேண்டியிருந்தால் ஒற்றை மாட்டு வண்டியிலாவது, இரட்டை மாட்டு வண்டியிலாவது போகிறோம். வண்டிகள் போவதற்குச் சாலைகள் போட்டிருக்கிறார்கள். பெரும்பாலும் கிராமங்களில் மண் சாலைகளே போடப்பட்டுள்ளன.

நகரங்களில் மாட்டுவண்டிகளைத் தவிர, குதிரை வண்டிகளையும் காண்கிறோம். இவைகளைத் தவிர, மோட்டார் வண்டிகளும் இருக்கின்றன. மோட்டார் வண்டிகளில் பல மனிதர்களை ஏற்றிச் செல்லும் மோட்டார் பஸ்களும், சாமான்களை ஏற்றிச் செல்லும் மோட்டார் லாரிகளும் இருக்கின்றன. இங்கே கப்பிகளாலும், கற்களாலும் சாலைகள் கெட்டியாகப் போடப்பட்டுள்ளன.

விரைவில் அதிக தூரம் பிரயாணம் செய்ய ரயில் வண்டிகள் இருக்கின்றன. நீங்கள் ரயில் வண்டியில் பிரயாணம் செய்திருக்கிறீர்களா? ரயில் வண்டிகள் ஒரே சமமாகவுள்ள தரையில் போடப்பட்டிருக்கும் நீண்ட இருப்புப் பாதைகள்மேல் நீராவியின் உதவியால் அதிவேகமாக ஓடுகின்றன. ஓடும் சக்தியுள்ள இயந்திரம் இருக்கும் வண்டிக்கு எஞ்சின் என்று பெயர்.

ஆறுகளில் வெள்ளம் வரும்போது சௌகரியமாய்ப் பிரயாணம் செய்வதற்குப் பாலங்கள் கட்டப்பட்டிருக்கின்றன.

ஒரு தேசத்திலிருந்து மற்றொரு தேசத்திற்குச் செல்லும் பொழுது மத்தியில் கடல் இருந்தால், அதைக் கப்பலால் கடந்து செல்கிறோம்.

இக்காலத்தில் அதி வேகமாக வெகு தூரங்களுக்குச் செல்ல ஆகாய விமானங்கள் இருக்கின்றன. நீங்கள் ஆகாய விமானம் பார்த்திருக்கிறீர்களா? உங்கள் ஊருக்குமேல் எப்



ஆகாய விமானம்

பொழுதாவது ஆகாய விமானம் பறந்து செல்வதைக் கவனித்திருக்கிறீர்களா? ஆகாய விமானங்கள் மணிக்கு நூறு மைல் வேகத்துக்கு மேல் பிரயாணம் செய்கின்றன.



தபால் ஆபீஸ்

நாம் நம் சொந்தக்காரர்களுக்காவது, நண்பர்களுக்காவது சமாசாரம் தெரிவிக்க வேண்டியிருந்தால், கடிதம் எழுதி, அதற்குத் தகுந்த தபால் பில்லை ஒட்டி, விலாசம் எழுதி, தபால் பெட்டியில் போடுகிறோம். பிறகு இரண்டொரு தினங்களில் அது குறிப்பிட்ட விலாசதாருக்குப் போய்ச் சேருகிறது. அதிக அவசரமான சமாசாரமாயிருந்தால் அதைத் தந்தி மூலம் தெரிவிக்கலாம்.

பயிற்சி

1. போக்கு வரவு மார்க்கங்கள் எவை?
2. போக்கு வரவுக்குரிய சாதனம் எவை?
3. தபாலாபீஸின் உபயோகம் என்ன?
4. சாமான்கள் வெளியூர்களுக்கு எப்படி அனுப்பப்படுகின்றன?

பதின்மூன்றும் பாடம்

சந்தை கூடுமிடம்

ஒவ்வொரு கிராமங்களிலும் அங்கிருக்கும் ஜனங்களுக்குத் தேவையான எல்லாப்பொருள்களும் கிடைக்கின்றனவா? இல்லை. ஆகையால் அவர்களுக்குத் தேவையான பொருள்களை வேறு கிராமங்களிலிருந்தாவது, நகரங்களி லிருந்தாவது வரவழைத்துக்கொள்ள வேண்டி யிருக்கிறது. அதே சமயத்தில் அவர்கள் தங்கள் கிராமத்தில் அதிகமாயுள்ள பொருள்களை வேறு கிராமத்தாருக்கு விற்று விடுகிறார்கள். இம்மாதிரி ஒவ்வொருவரும் தங்களுக்குத் தேவையான பொருள்களுக்காகப் பல கிராமங்களுக்குச் செல்வதைவிட, பல கிராமத்தவர்கள் ஓர் பொதுவான இடத்திற்குத் தங்கள் பொருள்களை எடுத்து வந்தால், அவரவர்கள் தங்களுக்குத் தேவையான பொருள்களை அங்குச் சுலபமாக வாங்கிக் கொள்ளலாம் அல்லவா? இம்மாதிரியாக விற்பவர்களும் வாங்குபவர்களும் கூடுமிடத்திற்குச் 'சந்தை' என்று பெயர்.



சந்தை

சந்தை கூடுமிடம் பல கிராமங்களுக்கு மத்தியில் இருந்தால், ஜனங்கள் நான்கு பக்கங்களி லிருந்தும் வந்து சுலபமாகக் கூடுவார்கள். சந்தை கூடுமிடம் சாதாரணமாகப் பல ரஸ்தாக்கள் கூடுமிடமா யிருப்பதால், வண்டிகளும் மனிதர்களும் சுலபமாகப்போகவரக்கூடும். அநேக முக்கியமான கிராமங்களில் வாரத்துக்கு ஒரு முறை சந்தை கூடுகிறது.

சந்தைகளில் அவ்வூரைச் சுற்றியுள்ள கிராமங்களில் விளையும் உணவுப் பொருள்கள், காய், கறி, பழங்கள், சட்டி, பானைகள், துணிகள், ஆடு, மாடுகள் முதலியவைகளும் விற்கப்படும். கிராமத்தவர்கள் தாங்கள் கொண்டு போகும் சாமான்களைச் சந்தையில் விற்று விட்டுத் தங்களுக்குத் தேவையான பொருள்களைச் சந்தையில் வாங்கிச் செல்லுவார்கள்.

பயிற்சி

1. சந்தை எதற்காகக் கூடுகிறது?
2. அது எந்த இடத்தில் கூடுகிறது?
3. அது கூடுவதால் என்ன பயன்?

பதினான்காம் பாடம்

தொழிற் சாலைகள்

நமக்கு முக்கியமாய்த் தேவையானவை உணவும் உடையு மல்லவா? உணவுப் பொருள்கள் பூமியில் உற்பத்தியாகின்றன. துணிகள் நெய்ய உபயோகமாகும் பருத்தியும் பூமியில் உண்டாகின்றது. சில கிராமங்களில்



கை ராட்டினம்

வீடுகளிலேயே பருத்தியை நூலாக நூற்றுத் துணியாக நெய்கிறார்கள். ஆனால் இம்மாதிரி நெய்யும் துணிகள் எல்லா ஜனங்களுக்கும் போதா அல்லவா? ஆகவே, சில நகரங்களில் இயந்திரங்களின் உதவியால் துணி



நெசவு

கள் அதிகமாக நெய்கிறார்கள். வேறு சில நகரங்களில் நமக்குத் தேவையான பித்தளை, வெண்கலம் முதலிய வற்றால் செய்த பாத்திரங்கள், இரும்புச் சாமான்கள், கண்ணாடி வகைகள் முதலியவை செய்கிறார்கள். இப்படிப்பட்ட இடங்களுக்குத் தொழிற் சாலைகள் என்று பெயர். பெரிய தொழிற் சாலைகளில் நூற்றுக் கணக்கானவர்கள் வேலை செய்வார்கள். அங்குச் சாமான்கள் இயந்திரங்களாலேயே செய்யப்



மில்

படுகின்றன. தொழிற்சாலைக்கு வேண்டிய சௌகரியங்கள் சுலபமாகக் கிடைக்கக் கூடிய இடங்களிலேயே தான் தொழிற் சாலைகள் அமைகின்றன. தொழிற் சாலையிலிருந்து சுற்றியுள்ள இடங்களுக்குப் போக்கு வரவு மார்க்கங்கள் சுலபமாயிருக்கும்.

(உபாத்தியாயருக்குக் குறிப்பு:— பிள்ளைகளை வண்டிப்பேட்டை, தபாலாபீஸ், சந்தை, சமீபத்திலுள்ள ரயில்வே ஸ்டேஷன், தொழிற் சாலை ஆகிய இவைகளுக்கு அழைத்துச் செல்லவேண்டும்).

பயிற்சி

1. தொழிற்சாலைகள் என்றால் என்ன? அங்குச் செய்யப்படும் சில சாமான்களைக் கூறுக.
2. மனிதர்களுக்கு முக்கியமானவை என்னென்ன?
3. துணிகள் எதனால் உண்டாகின்றன?
4. அவை எவ்வாறு உண்டாகின்றன?

—

பதினைந்தாம் பாடம்

படங்களும் பிளான்களும்

பிள்ளைகளே, உங்களுக்கு ஒரு சிறிய முகம் பார்க்கும் கண்ணாடியின் உருவப்படத்தை வரையத் தெரியுமா? ஓர் அடிக்குச்சியை எடுத்துக் கொண்டு அந்தக்கண்ணாடியின் நீளத்தையும் அகலத்தையும் அளந்து கொள்ளுங்கள். நீளம் 3 அங்குலம் என்றும், அகலம் 1½ அங்குலம் என்றும் வைத்துக்கொள்ளுவோம். ஒரு காகிதத்தில் அந்தக் கண்ணாடியின் நீளத்தையும் அகலத்தையும் வைத்துப் படத்தில் காட்டியபடி ஒரு படம் வரையுங்கள். இதைப்போலவே உங்கள் புஸ்தகத்தின் நீளத்தையும் அகலத்தையும் அளந்துகொண்டு, அதன் படத்தை ஒரு காகிதத்தில் வரைந்து காட்டலாம்.



ஆனால், இவ்வாறு, மேஜை, கறுப்புப் பலகை, வகுப்பு அறைகளின் உருவங்களை வரைவதெப்படி? அவற்றின் நீள அகலங்களை அப்படியே வைத்துக்கொண்டு, காகிதத்தில் அவற்றின் படங்களை வரைய முடியாது. ஏன்? காகிதத்தைக்காட்டிலும் அந்த வஸ்துக்கள் அதிகப் பெரியவை. ஆனால் அவ்வஸ்துக்களின் நீள அகலங்களைச் சுருக்கி, அவற்றின் படங்களை வரையலாம்.

உதாரணமாக உங்கள் வகுப்பு அறையின் படத்தை வரைவதாக வைத்துக் கொள்ளுவோம். அறையின் நீளம் 30 அடி என்றும், அகலம் 15 அடி என்றும் வைத்துக்கொள். 10 அடிக்கு ஒரு அங்குலமாக 30 அடிக்கு மூன்று அங்குலக்கோடு ஒன்றும், 15 அடிக்கு 1 அங்குலக்கோடு ஒன்றும் எடுத்துக் கொண்டு, ஒரு நீண்ட சதுரம் வரைந்தால் அதுவே உங்கள் வகுப்பு அறையின்படமாகும்.

அடுத்த பக்கத்தில் ஓர் பள்ளிக்கூடத்தின் படம் வரைந்து காட்டப்பட்டிருக்கிறது பார். பள்ளிக்கூடத்தின் நீளம் 94 அடி. அகலம் 76 அடி. உன் அடிக்குச்சியை எடுத்துக் கொண்டு படத்தின் வெளிக் கோடுகளை அளந்து பார். 20 அடிக்கு ஒரு அங்குலமென்று வைத்துக்கொண்டு உன்னுடையபள்ளிக்கூடத்தின் நிலப் படம் வரையப்பட்டிருக்கிறது. இதனுள் நான்கு வகுப்பு அறைகளின் படமும் வரையப்பட்டிருக்கிறது பார். ஒவ்வொரு வகுப்பின் நீளமும் 28 அடி; அகலம் 14 அடி. படத்தில் இவைகள் எத்தனை அங்குலமாகக் காட்டப்பட்டிருக்கின்றன என்று அளந்துபார்.

பள்ளிக்கூடத்திற்குள் செல்லும் பாதையும், வகுப்பு அறைகளுக்குள் செல்லும் வாயில்களும் காட்டப்பட்டிருக்கின்றன. அடிக்குச்சியைக் கொண்டு ஒவ்வொரு வாயிலையும் அளந்து, அதன் உண்மையான அகலத்தைக் கண்டுபிடி. (அடிக்குச்சியில் ஒவ்வொரு அங்குலமும் பத்துச் சிறு பாகங்களாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு சிறு பாகமும் படத்தில் இரண்டு அடிகளைக் குறிக்கும்). அறைகளின் சுவர்களில்

ஜன்னல்களும் காட்டப்பட்டிருக்கின்றன பார். அவைகளையும் அடிக் குச்சியால் அளந்து உண்மையான அளவைக் கண்டுபிடியுங்கள்.



பள்ளிக்கூடத்தின் படம்

இதைப் போலவே ஒரு கிராமம், தாலூகா அல்லது ஒருஜில்லாப் படத்தையும் ஓர் தகுதியான அளவை வைத்துக் கொண்டு வரைந்து அதிலுள்ள ஆறுகள், மலைகள், ரயில் பாதை, ரஸ்தா மார்க்கம், முக்கிய ஊர்கள் ஆகிய இவைகளைக் குறிக்கலாம்.

கடல்களைக் குறிப்பதாயிருந்தால் நீல நிறத்தில் குறிக்க வேண்டும். மைதானங்களுக்குப் பச்சை வர்ணமும் மலைகளுக்குப் பழுப்பு வர்ணமும் உபயோகிக்க வேண்டும்.

உபாத்தியாயருக்குக் குறிப்பு:-ஜில்லாப் படம் அல்லது ராஜதானிப் படத்தைக் கொண்டு, படங்களுக்குவழக்கமாகஉபயோகப்படுத்தும் (Conventional Colour Scheme) வர்ணங்களைப் பற்றி விபரமாகச் சொல்லவும்.

அடுத்த பக்கத்திலுள்ள ஜில்லாவின் படத்தைப்பாருங்கள். அதன் அடியில் ஸ்கேல் 1 அங்குலத்துக்கு இத்தனை மைல் என்று எழுதப்பட்டிருக்கிறதல்லவா? படத்தில் 1 அங்குல தூரம் அதில் குறித்த அளவு மைல் தூரத்தைக் காட்டும். இதிலிருந்து நமக்கு அப்படத்தில் ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்திற் குள்ள தூரம் எத்தனை மைல் என்று தெரியும். நமது ஜில்லாவின் தாலூகாக்கள் படத்தில் காட்டப்பட்டிருப்பதைக் கவனியுங்கள்.

பயிற்சி

1. ஒரு புஸ்தகத்தின் பிளானை எப்படி நீ வரைவாய்?
2. ஒரு வீட்டின் அகலம் 30 அடியும், நீளம் 60 அடியுமிருந்தால், அவ்வீட்டின் பிளானை எப்படி வரைவாய்?
3. நீ வசிக்கும் ஊரிலுள்ள ஒருபொதுவான கட்டிடத்தின் பிளானை வரைந்து காட்டு.

மதுரை ஜில்லா பூகோளம்

பதினரும் பாடம்

எல்லைகள்

பிள்ளைகளே, நீங்கள் வசிப்பது ....என்ற ஊர். இம்மாதிரிப் பல ஊர்கள் அடங்கிய பாகத்திற்குத் தாலூகா என்று பெயர். பல தாலூகாக்கள் அடங்கியது ஒரு ஜில்லா. அநேக ஜில்லாக்கள் கொண்டது ஒரு மாகாணம். பல மாகாணங்கள் சேர்ந்தது ஒரு தேசம்.

நாம் வசிக்கும் தேசத்திற்கு இந்தியா என்று பெயர். இந்தத் தேசத்தின் தென் பாகமாகிய தென் இந்தியாவில் சென்னை மாகாணத்தில் நாம் வசிக்கிரோம்.



தென் இந்தியாப் படம்

சென்னை மாகாணம் இந்தியாவின் தெற்கிலும் தென் கிழக்கிலும் அமைந்திருக்கிறது. இந்த மாகாணத்தின் தெற்குப் பாகத்தில் நாம் வசிக்கும் இடத்திற்கு மதுரை ஜில்லா என்று பெயர். இதன் தலைநகர் மதுரை. இப்போது நாம் கற்றுக்கொள்ளப் போவது நமது ஜில்லாவின் பூகோளமே.

பூகோளப் பாடங்களைக் கற்றுக் கொள்வதற்கு முதன் முதலில் முக்கியமாக நாம் தெரிந்துகொள்ள வேண்டியது, நாம் படிக்கும் பாகத்தின் எல்லைகள் இன்னவை என்பதே. எல்லைகள் என்பன ஓர் இடத்தின் நான்கு திக்கிலுமுள்ள இடங்களாம்.

நமது ஜில்லாவின் படத்தைக் கவனியுங்கள். நமது ஜில்லாவுக்குக் கிழக்கிலும் தெற்கிலும் இராமநாதபுரம் ஜில்லாவும், மேற்கே ஏலக்காய் மலைகளும், வடக்கில் திருச்சிராப்பள்ளி, கோயம்புத்தூர் ஜில்லாக்களும் எல்லைகளாக அமைந்திருப்பதைக் காண்பீர்கள்.

ஒரு ஜில்லாவானது பல தாலூகாக்களைக் கொண்டது என்று படித்தோம் அல்லவா? நம் மதுரை ஜில்லாவை எட்டுத் தாலூகாக்களாகப் பிரித்திருக்கிருர்கள். அவையாவன:— 1. மதுரை, 2. திருமங்கலம், 3. பெரியகுளம் 4. கொடைக்கானல், 5. பழனி, 6. திண்டுக்கல், 7. நிலக்கோட்டை, 8. மேலூர். இவைகளில் நீங்கள் வசிக்கும் தாலூகா.........என்பது.

பயிற்சி

1. நீங்கள் வசிக்கும் தாலூகாவின் எல்லைகளிலுள்ள ஊர்களைச்சொல்லுங்கள்.
2. உங்கள் ஊரின் எல்லைகளைக் கூறுங்கள்.
3. உங்கள் ஜில்லாவின் நான்கு திசைகளிலும் உள்ள ஜில்லாக்கள் எவை?
4. மாகாணம் என்று எதற்குப் பெயர்?
5. தாலூகா என்று எதற்குப் பெயர்?

மதுரை ஜில்லா



திருச்சிராப்பள்ளி ஜில்லா
கோயம்புத்தூர் ஜில்லா
புதுக்கோட்டை சமஸ்தானம்.
திருவாங்கூர் சமஸ்தானம்
இராமநாதபுரம் ஜில்லா
பழனி தாலூகா
திண்டுக்கல் தாலூகா
நிலக்கோட்டை தாலூகா
மேலூர் தாலூகா
பெரியகுளம் தாலூகா
மதுரை தாலூகா
திருமங்கலம் தாலூகா
வ
மே
கி
தெ
மலைகள்
நதிகள்
தாலூகாஎல்லைகள்

பதினேழாம் பாடம்

இயற்கையமைப்பு

1. மலைகள்

நமது ஜில்லாவின் படத்தைப் பாருங்கள். மேற்கில், பல மலைத்தொடர்கள் இருக்கின்றன. இவை பெரும்பாலும் திருவாங்கூர் ராஜ்யத்தைச் சேர்ந்தவை. இவற்றில் ஒரு பாகம் ஏலக்காய் மலைகள். இத்தொடரின் சில கிளைகள் நமது ஜில்லாவுக்குள் உள்ளன. அவைகளில் முக்கியமானவை பழனி மலைகள். இம்மலையின் ஒரு பாகமானகோடைக் கானல் மலைக்குத்தான் தனவந்தர்கள் தேக சௌக்கியத்திற்காகக் கோடைக் காலத்தில் போய்வருகிறார்கள். இவைகளுக்கடுத்தவை வருஷநாடு, ஆண்டிப்பட்டி மலைகள். வருஷ நாடு, ஆண்டிப்பட்டி என்னும் இரண்டு ஊர்களை அடுத்திருப்பதால் இவற்றிற்கு அப்பெயர் வந்தது. இவற்றிற்கு வட கிழக்கில் நாகமலை இருக்கிறது. பழனி மலைகளுக்குக் கிழக்கில் சிறுமலையும், அழகர் மலையும் இருக்கின்றன. சிறுமலையில் பயிராகும் வாழைப்பழங்கள் அதிகப் பேர் போனவை.

2. பீட பூமி

கடல் மட்டத்திற்கு மிகவும் உயர்ந்துள்ள பிரதேசத்திற்குப் பீடபூமி என்பது பெயர். மேல் பழனி மலைகளுக்கும் கீழ்ப் பழனி மலைகளுக்கும் இடையே ஒரு பீடபூமி இருக்கிறது. அதில் ஒரு கிராமம் உண்டு. அதற்குப் பண்ணைக்காடு என்பது பெயர்.

3. ஆறுகள்

பிள்ளைகளே, படத்தைப் பாருங்கள். அதில் பாயும் ஆறுகள் எவை? இந்த ஜில்லாவில் பாயும் நதிகளில் முக்கியமானது வைகை. இது வருஷநாடு, ஆண்டிப்பட்டி மலைகளில் உற்பத்தியாகி, வட கிழக்காய்த் திரும்பி, மதுரை வழியாக இராமநாதபுரம் ஜில்லாவில் பிரவேசித்துக் கடலில் வீழ்கிறது. மழைக் காலத்தில் இதில் தண்ணீர் வெகு வேகமாகச் செல்லுவதால், வைகைக்கு வேகவதி என்ற ஒரு பெயரும் உண்டு.

i. வைகையின் உபநதிகள் நான்காகும். அவை (1) சுருளி நதி, (2) தேனி ஆறு, (3) வராகநதி, (4) மஞ்சள் நதி என்பனவாம். இவைகளில் முக்கியமானது சுருளி நதி. இது உற்பத்தியாகும் இடத்தைப் பாருங்கள். அந்த இடத்திற்குக் கம்பம் பள்ளத்தாக்கு என்பது பெயர். சுருளி நதி எந்த இடத்தில் வைகை நதியுடன் சேருகிறது என்று பாருங்கள். அது தேனிக்குத் தென்கிழக்கில் வைகை நதியுடன் சேருகிறது.

ii. பெரியாறு:—இது திருவாங்கூர் ராஜ்யத்தில் ஒருவருக்கும் உதவாமல் காட்டு வழியாய் ஓடிக்கொண்டிருந்தது. சுமார் 45 வருஷங்களுக்கு முன், பென்னிங்விக் என்பவரது விடா முயற்சியால் அதற்கு ஓர் அணை கட்டி, அந் நீரைத் தேக்கி, நிலங்களில் பாய்ச்ச ஏற்பாடு செய்யப்பட்டது.

அணை கட்டித்தேக்கிய தண்ணீரை மலையில் புதிதாய்த் துளைத்த ஒரு சுரங்கத்தின் வழியாய் விரவனூறு மூலம் சுருளி ஆற்றில் கலக்கும்படி ஏற்பாடு செய்யப்பட் டிருக்கிறது. அந்தத் தண்ணீர் முழுவதும் வைகை ஆற்றின் வழியாய்ச் சென்று விடாமல், நிலக்கோட்டைத் தாலூகாவிலுள்ள அணைப்பட்டி என்னும்கிராமத்துக்கு அருகில் பேரணை என்ற ஓர் அணையி

லிருந்து பிரிக்கப்படுகிறது. அங்கிருந்து வரும் நீர்தான் 12 சிறு கால்வாய்களின் மூலம், நிலக்கோட்டை, மதுரை, மேலூர், தாலூகாக்களிலுள்ள நிலங்களுக்குப் பாய்ச்சப்பட்டிருக்கிறது.

இந்த ஏற்பாட்டினால் அநேக புன்செய்களை நன்செய்களாக மாற்றி விட்டார்கள். இப்பொழுது பயிர்கள் நன்றாய் விளைகின்றன. சர்க்காருக்கும் அதிகத் தீர்வை கிடைக்கிறது. தரிசு நிலங்கள் செழிப்பு நிலங்களாகி விட்டன.

iii. குண்டாறு:-இது ஆண்டிப்பட்டிமலையில் கிழக்குப் பாகத்தில் உற்பத்தியாகித் தென் கிழக்காய்த் திருமங்கலம் தாலூகா வழியாக ஓடி, இராமநாதபுரம் ஜில்லாவில் புகுந்து கடலில் விழுகிறது. இதில் மழைக்காலத்தில் தான் ஜலம் ஓடும்.

iv. ஷண்முக நதி:—இது பழனி மலைகளில் உற்பத்தியாகி, வடக்கு முகமாக ஓடிக் காவிரியின் உபநதியான அமராவதியில் கலக்கிறது.

v. குடவனாறு:—சிறு மலையில் இந்நதி உற்பத்தியாகி, வடக்கு நோக்கி ஓடிக் காவிரியில் கலக்கிறது.

vi. வரிசிலை ஆறு:— இது இந்த ஜில்லாவில் வட பாகத்தில் உற்பத்தியாகி, மேலூர்த்தாலூகாவில் பாய்ந்து, இராமநாதபுரம் ஜில்லா வழியாய்ச் சென்று கடலில் விழுகிறது.

4. சமவெளிகள்

மேற்கூறிய மலைப் பிரதேசம், பீடபூமிப் பிரதேசம் ஆகிய இவைகளைத் தவிர மற்ற இடங்களெல்லாம் சமவெளிப் பிரதேசங்களாகும். இப் பிரதேசங்கள் சமுத்திர மட்டத்துக்கு மேல் சற்று உயரமாக இருக்கின்றன. ஆகையால் இப் பிரதேசங்களைச் சமவெளிகள் என்று சொல்லவேண்டும். இப் பிரதேசத்திலுள்ள பெரும்பாலான நிலங்கள் சாகுபடிக்குத் தகுதியான நன்செய், புன்செய் நிலங்களே.

5. காடுகள்

ஜமீன்களுக்குச் சொந்தமாயுள்ள சில காடுகள், சிறுமலையிலும் பழனி மலையிலும், ஆண்டிப்பட்டி மலையிலும் இருக்கின்றன. சர்க்காருக்குச் சொந்தமாயுள்ள காடுகள், சிறுமலை, அழகர் மலை, நத்தம் மலை, பழனி மலைகளில் உள்ளன. இவற்றில் முக்கியமான பெரிய காடுகள் இரண்டுண்டு. அவையாவன: (1) கோம்பையிலிருந்து தெற்கே கம்பம் பள்ளத்தாக்குவரையில் உள்ளது ஒரு இருண்ட காடு; (2) இதற்குக் கிழக்கே உள்ளது மேலக் கூடலூர் வண்ணாத்திப்பாறை என்ற காடு.

மதுரை ஜில்லாவின் விஸ்தீரணம்:- மதுரை ஜில்லாவின் பரப்பு 4,916 சதுர மைல் என்று கணக்கிட்டு இருக்கிறார்கள்.

பயிற்சி

1. மதுரை ஜில்லாப் படம் வரைந்து, மலைகளைக் குறிப்பிடுக.
2. மதுரை ஜில்லாப் படம் வரைந்து, முக்கிய நதிகளைக் குறிப்பிடுக. பேரணையைக் குறிப்பிடுக.
3. கோடைக் காலத்தில் ஜனங்கள் தேக சௌக்கியத்தை முன்னிட்டு எந்த மலைக்குச் செல்லுகிறார்கள்? ஏன்?
4. உலகப் பிரசித்தியான வாழைப்பழம் எம் மலையில் கிடைக்கிறது?
5. நமது ஜில்லாவிலுள்ள முக்கிய நதி எது?
6. பெரியாறு அணைக்கட்டினால் ஏற்பட்ட நற்பலன்கள் என்ன?

7. சர்க்காருக்குச் சொந்தமான இரண்டு பெரிய காடுகள் யாவை?

8. பெரியாற்றில் ஓடின ஜலத்தை நிலங்களுக்குப் பிரயோஜனப்படும்படி கவர்ன்மெண்டார் என்ன ஏற்பாடு செய்திருக்கிறார்கள்?

பதினெட்டாம் பாடம்

ஜில்லா, தாலுகாக்களிலுள்ள விளை பொருள்களும் கைத்தொழில்களும்

நமது ஜில்லா ஒரு வறண்ட பிரதேசமென்றே சொல்லலாம். இதில் மிகவும் வறண்ட பாகம் பழனித் தாலுகாவாகும். அதிக மழையையுடையது மேலூர்த்தாலுகா எனச் சொல்லலாம். இந்த ஜில்லாவில் வைகை ஆறும் அதன் உபநதிகளும் பாயுமிடங்கள் வண்டல் படிந்திருப்பதால் அதிகச் செழுமை பொருந்தியுள்ளன.

I. விளைபொருள்கள்

பயிர்கள் நன்ருய் வளர்வதற்குப் பூமியின் செழுமையும், தண்ணீர் வசதியும், உஷ்ணமும் வேண்டும்.

நம் ஜில்லாவில் வைகை நதியும் அதன் உப நதிகளும் பாயப்பெற்றனவாகிய பெரியகுளம், நிலக்கோட்டை, மதுரை, மேலூர்த் தாலுகாக்களில் நெல் ஏராளமாய்ச் சாகுபடி செய்யப்படுகிறது.

திண்டுக்கல் பழனித் தாலுகாக்கள் வறண்ட பிரதேசங்கள்; ஜல வசதியில்லை. ஆகையால் இங்குக் கம்பு, சோளம், வரகு, துவரை வேர்க்கடலை முதலிய புன்செய்ப் பயிர்கள் சாகுபடி செய்யப்படுகின்றன.

திருமங்கலம் தாலுகாவில் பெரும் பாகம் கரிசல் மண் நிறைந்துள்ளது; மழையும் சொற்பம். இங்குப் பருத்தியும், உளுந்து, துவரை முதலிய தானியங்களும் பயிர் செய்யப்படுகின்றன.

இன்னும் பழனி, பெரியகுளம், திண்டுக்கல், கொடைக்கானல் ஆகிய இத் தாலுகாக்களின் மலைச்சாரல்களில் காப்பி, தேயிலை, ஏலம், வாழை முதலிய தோட்டங்களும், மலையை அடுத்த காடுகளில், குங்கிலியம், சிங்கோனு, கற்பூரம் முதலான மரங்களும், இன்னும் விலைமதிப்புள்ள பலவகையான மரங்களும் உண்டாகின்றன.

மேலும், பழனி, திண்டுக்கல், பெரியகுளம் ஆகிய தாலுகாக்களில் புகையிலை விசேஷமாய்ப் பயிராகிறது. பெரியகுளத்தில் எள்ளும், மேலூரில் கொட்டைமுத்தும் விசேஷம்.

பயிற்சி

1. நெல் நமது ஜில்லாவில் எங்குப் பயிராகிறது? ஏன்?
2. எள்ளு, வேர்க்கடலை, கொட்டைமுத்து, பருத்தி, துவரை, புகையிலை ஆகிய இவை விசேஷமாய்ப் பயிராகும் தாலுகாக்களைச் சொல்லுக.
3. கொடைக்கானல் மலையில் காணப்படும் இலைகளில் இரண்டு வகைகளையும், மலைச் சரிவுகளில் பயிராகும் பொருள்களையும் சொல்லுக.
4. வாழைப்பழம் நமது ஜில்லாவில் எங்கு விசேஷம்?

II. கைத்தொழில்

நமது ஜில்லாவில் கிடைக்கும் மூலப் பொருள்களைக் கொண்டு, அநேக செய்பொருள்கள் தயாராகின்றன. இவ்விதம் நடக்கும் தொழில்களில் முக்கியமானவை நூல்நூற்றல், நெசவு, மரச்சாமான் செய்தல், பாத்திர வேலை, தோல் பதனிடுதல், கோரப்பாய் பின்னுதல், சுருட்டு,



மதுரை ஜில்லா
கோயம்புத்தூர் ஜில்லா
திருச்சிராப்பள்ளி ஜில்லா
புதுக்கோட்டை சமஸ்தானம்
திருவாங்கூர் சமஸ்தானம்
இராமநாதபுரம் ஜில்லா
நெல், புகையிலை
நவதானியங்கள் பருத்தி
பழனி தாலூகா
பழங்கள்
புகையிலை
பித்தளைப்பாத்திரங்கள்
இரும்புப்பெட்டிகள்
பூட்டுகள், சுருட்டு செய்தல்
நெசவுத்தொழில்
திண்டுக்கல் தாலூகா
தோல் பதனிடுதல்
வாழை
காப்பி
துணி, கம்பளி நெய்தல்
காபி
வெள்ளைப்பூண்டு, பழங்கள்
கொடைக்கானல் தாலூகா
காய்கறி, கீரை
புன்செய் பயிர்கள்
மேலூர் தாலூகா
விறகுவெட்டுதல்
எண்ணெயெடுத்தல்
நெல்
நெல், வாழை
நிலக்கோட்டை தாலூகா
புன்செய்த்தானியங்கள்
நிலக்கடலை
ஏலம், காபி, தேயிலை
பஞ்சு அறைத்தல்
நெசவுத்தொழில்
துணி, கம்பளி நெய்தல்
பெரியகுளம் தாலூகா
நெல்
நவதானியம்
நிலக்கடலை
பருத்தி
திருமங்கலம் தாலூகா
நெசவுத்தொழில்
பஞ்சு அறைத்தல்
நெல்
மதுரைதாலூகா
நூல் நூற்றல்
நெசவுத் தொழில்
சாயத் தொழில்
வ
மே
கி
தெ
விளைபொருள்களும் கைத்தொழில்களும்

இரும்புப்பெட்டி, பூட்டுச் செய்தல் முதலியன.

நெசவு:—நெசவுத் தொழிலைப் பட்டு நெசவு, பருத்தி நெசவு, கம்பளி நெசவு என மூவகையாகப் பிரிக்கலாம். பட்டு நெசவும், பருத்தி நெசவும் விசேஷமாய்ச் சௌராஷ்டிர ஜாதியாரால் செய்யப்பட்டு வருகின்றன. இவர்கள் மதுரை, திண்டுக்கல் ஆகிய இடங்களில் அதிகமா யிருக்கிறார்கள். இவர்கள் செய்யும் சரிகை வேஷ்டிகளும், சாய வேஷ்டிகளும் சுன்னடிப் புடவைகளும் மிக்வும் அழகானவை.

இன்னும் சேடரும், கைக்கோளரும், தேவாங்கரும், மகமதியரும், கிறிஸ்தவரும், ஆதித் திராவிடர்களும் நெசவுத்தொழில் செய்கிறார்கள்.

திருமங்கலம் தாலூகாவில் அநேக இடங்களில் துவாலைத் துண்டுகளும், மெத்தை விரிப்புகளும், கதர்த்துணிகளும் தயாராகின்றன.

நிலக்கோட்டை, பெரியகுளம், பழனி முதலிய இடங்களில் மலிவான கலர்ப் புடவைகள் நெய்யப்படுகின்றன.

கம்பளி நெசவு:— இது பழனி, பெரியகுளம், நிலக்கோட்டைத் தாலூகாக்களில் உள்ள குறும்பர் என்ற ஜாதியாரால் சில கிராமங்களில் நடைபெறுகின்றது.

கோரப்பாய் பின்னுதல்:— நமது ஜில்லாவில் சிற்சில இடங்களில் மகமதியர்களில் ஒரு பிரிவினரால் இத்தொழில் செய்யப்படுகிறது.

பாத்திரம் செய்தல்:—மதுரை, திருமங்கலம், நிலக்கோட்டை, பெரியகுளம் முதலான இடங்களில் பாத்திரங்கள் செய்யப்படுகின்றன.

திண்டுக்கல்லில் தோல் பதனிடுதல், இரும்புப் பெட்டி, பூட்டுகள் செய்தல், சுருட்டுச் செய்தல் முதலிய தொழில்கள் நடைபெறுகின்றன.

கொஞ்ச காலத்துக்கு முன் கைத்தொழில்கள் எல்லாம் கையாலேயே செய்யப்பட்டு வந்தன; இப்பொழுதோ இயந்திரங்களினால் செய்யப்படுகின்றன. உதாரணமாக, நெல் அரைப்பதற்கும், மாவு திரிப்பதற்கும், நூல் நூற்பதற்கும் இயந்திரங்கள் பல ஊர்களிலிருப்பதை நீங்கள் பார்த்திருப்பீர்கள்.

நூல் நூற்றல்:-முன்னாளில், கைராட்டினத்தினாலேயே நூல் நூற்றார்கள்.



கைராட்டினம்

இது வேலை யில்லாதவர்களுக்கும் கடின வேலை செய்ய முடியாதவர்களுக்கும் ஜீவனம் செய்வதற்குச் சுலபமான வழி. இக்காலத்திலும் அநேக ஜனங்கள் கைராட்டினங்களினால், நூல் நூற்கிறார்கள். அந் நூல்களைக் கொண்டு அவர்கள் கைத்தறிகளில் உடைகளாக நெய்கிறார்கள். அவ்வாறு கையினாலே நூல் நூற்று நெய்த ஆடைகளுக்குக் கதர் என்பது பெயர்.

இப்பொழுது மதுரை, திண்டுக்கல்லுக் கடுத்த காசிபாளையம், திருமங்கலம் தாலூகாவிலுள்ள குண்டத்

தூர், சாத்தங்குடி ஆகிய இவ்விடங்களில் கதர்த் துணி ஏராளமாக நெய்யப்படுகிறது. மற்றத் தாலூகாக்களில் இத்தொழில் சுமாராக நடைபெற்று வருகின்றது.

பயிற்சி

1. நமது ஜில்லாவில் என்ன தொழில்கள் செய்யப்படுகின்றன ?
2. நெசவுத் தொழிலுக்குப் பெயர் போன இரண்டு தாலூகாக்கள் சொல்லுக.
3. திருமங்கலத்தில் ஜனங்கள் என்ன தொழில் செய்கின்றனர் ?
4. திண்டுக்கல்லில் நடைபெறும் தொழில்களைச் சொல்லுக.

பத்தொன்பதாம் பாடம்

தாலூகாக்களும் முக்கிய ஊர்களும், அங்கே நடைபெறும் தொழில்களும்

I. மதுரைத் தாலூகா

இது ஜில்லாவின் தென்கிழக்குப் பாகத்திலிருக்கிறது. இதன் எல்லைகளைப் படத்தில் பார். இது நமது ஜில்லாவிலுள்ள மற்றத் தாலூகாக்களைப் பார்க்கிலும் சிறியது. இதில் வைகை நதி செல்லும் திசையைப்பார். இது மேற்கிலிருந்து கிழக்கு முகமாய்ச் செல்லுகிறது. அதனால் இந்தத் தாலூகா மேற்கில் மேடாகவும், கிழக்கே போகப்போகத் தாழ்ந்தும் இருக்கிறதென்று தெரிகிறதல்லவா ? இங்கே ஜனநெருக்கம் மிகவும் அதிகம். வைகை யாற்றுக்கு வடக்கே யுள்ள நிலங்களில் பெரியாற்று ஜலம் பாய்கிறது. இங்கு நெல் விளைவு அதிகம்.

1. மதுரை:—இது இந்த ஜில்லாவின் முக்கிய பட்டணம். இதன் ஜனத்தொகை 182,018. இது வைகை யாற்றின் இரு புறங்களிலும் அமைந்திருக்கிறது. என்றாலும் இந்நகரத்து ஜனங்களில் பெரும்பான்மையோர் இதன் தென் கரையிலேயே வசிக்கிறார்கள். இது ஒரு ரயில்வே ஜங்ஷன். இங்கிருந்து நான்கு பக்கங்களிலும் இருப்புப்பாதைகள் செல்லுகின்றன. இந் நகரத்தின் விசேஷங்களைப் பற்றி நாம் பின்னால் படிப்போம்.

2. அவனியாபுரம்:— இது மதுரைக்குத் தெற்கில் 2 மைல் தூரத்திலிருக்கிறது. இங்கே மதுரை முனிசிபாலிட்டியாரால் நடத்தும் விவசாயப்பண்ணை இருக்கிறது.

3. பசுமலை:—இது மதுரைக்குத் தெற்கே சுமார் 2 மைல் தூரத்திலிருக்கிறது. இது ஒரு ரயில்வே ஸ்டேஷன். இங்கே அமெரிக்கன் மிஷன் பாதிரியார்களால் நடத்தப்படுகிற ஒரு ஹைஸ்கூலும், டிரெயினிங் ஸ்கூலும், தொழிற் கல்விப் பள்ளிக் கூடங்களும், விவசாயப் பண்ணைகளு மிருக்கின்றன. இங்கே மகாலக்ஷ்மி மில்ஸ் என்னும் பெயருள்ள ஒரு நூல் நூற்கும் இயந்திர சாலையுமிருக்கிறது. இங்குள்ள குன்றிலிருந்து ரஸ்தா போடுவதற்குச் சரளைக் கற்கள் மற்ற இடங்களுக்குக் கொண்டுபோகப்படுகின்றன.

4. திருப்பரங்குன்றம்:—இது மதுரைக்குத் தென் மேற்கிலுள்ள ஒரு சுப்பிரமணிய ஸ்தலம். மாதந்தோறும் கார்த்திகைக்கு இங்கு ஏராளமான ஜனங்கள் வருகிறார்கள். சிக்


மதுரைஜில்லா
கோயம்புத்தூர் ஜில்லா
திருச்சிராப்பள்ளி ஜில்லா
புதுக்கோட்டை சமஸ்தானம்
திருவாங்கூர் சமஸ்தானம்
இராமநாதபுரம் ஜில்லா
பழனித்தாலூகா
திண்டுக்கல் தாலூகா
கொடைக்கானல் தாலூகா
நிலக்கோட்டை தாலூகா
மேலூர் தாலூகா
பெரியகுளம் தாலூகா
மதுரை தாலூகா
திருமங்கலம் தாலூகா
கீரனூர்
பழனி
இடையகோட்டை
திண்டுக்கல்
கன்னிவாடி
ஆத்தூர்
செம்பகனூர்
கொடைக்கானல்
தேவதானப்பட்டி
பெரியகுளம்
அம்மையநாயக்கனூர்
குலசேகரன்கோட்டை
மேலூர்
கொட்டாம்பட்டி
திருவாதவூர்
அவனியாபுரம்
திருமங்கலம்
சாத்தன்குடி
கல்லுப்பட்டி
பேரையூர்
சாப்டூர்
உசிலம்பட்டி
போடிநாயக்கனூர்
தேனி
தேவாரம்
கோம்பை
சின்னமனூர்
உத்தமபாளையம்
கம்பம்
கூடலூர்
வ
மே
கி
தெ
தாலூகாஎல்லைகள்
முக்கிய ஊர்கள்

கந்தர் என்ற மகமதியரின் சமா



திருப்பரங்குன்றம்

தியும் இங்குள்ள மலைமேல் ஒரு பாகத்தில் இருக்கிறது.

5. யானைமலை:—இது மதுரைக்கு வடக்கே சுமார் 6 மைல் தூரத்தி லிருக்கிறது. இதன் நீளம் 2 மைல். இது ஒரு கற்குன்று. இங்கே முன் காலத்தில் கட்டப்பட்ட ஒரு விஷ்ணு கோவில் இருக்கிறது. இங்குள்ள மலையின் குகையில் ஜயின விக்கிரகங் களைக் காணலாம்.

6. வெள்ளியங் குன்றம், சிறுமலை ஆகிய இவையிரண்டும் இந்தத் தாலூகாவிலுள்ள ஜமீன் ஊர்கள்.

II. திருமங்கலம் தாலூகா

இது நமது ஜில்லாவின் தென் பாகத்திலிருக்கிறது. இதன் எல்லை களைப் படத்தில் பார்த்துச் சொல் லுங்கள். இந்தத் தாலூகா முழுவதும் கரிசல் மண் நிறைந்த பிரதேசம். இங்குப் பருத்தி ஏராளமாய்ப் பயிரா கிறது. இத் தாலூகாவில் வடக்கில் நாகமலைத் தொடரும், மேற்கில் வருஷநாடு, ஆண்டிப்பட்டி மலைத் தொடர்களும் இருக்கின்றன. இங்கு ஆறுகள் விசேஷமா யில்லாததால் கிணற்று நீரை இறைத்துத்தான் விவசாயம் செய்கிறார்கள். இந்தத் தாலூகாவில் இருப்புப் பாதைகள் எந்தத் திசையில் செல்லுகின்றன? அதன் மேலுள்ள பட்டணங்களைச் சொல்லுங்கள்.

1. திருமங்கலம்:—இது குண்டாற் றங்கரையி லிருக்கிறது. இங்கு வெள்ளிக் கிழமைதோறும் சந்தை கூடுகிறது. இங்கு ஒரு பஞ்சாலை உண்டு. இங்கே தாலூகாக் கச்சேரி யும், ரிஜிஸ்டர் ஆபீசும் இருக் கின்றன.

2. சிவரக்கோட்டை:—இங்கே பருத்தியும், புன்செய்த் தானியங்க ளும் விளைகின்றன.

3. கள்ளிக்குடி:—இது திருமங்க லத்துக்குத் தெற்கே சுமார் 9 மைல் தூரத்திலிருக்கிறது. இங்கே ஒரு சப்ரிஜிஸ்டர் ஆபீசும், லோக்கல் பண்டு சத்திரமும் உண்டு. இதைச் சுற்றி விளையும் பருத்தி வியாபாரத் துக்கு இது ஒரு மத்திய ஸ்தலமாக இருக்கிறது. இதன் மேற்கிலுள்ள ஒரு கற்பாறையிலிருந்து, ஒருவித மான சிறந்த கல் வெட்டி யெடுக்கப் படுகிறது.

4. கல்லுப்பட்டி:— இங்குப் பருத்தி விளைவு அதிகம்.

5. சாத்தங்குடி:—இவ்வூரில் கம்பி மடித்துண்டுகளும், கதர்த்துணிகளும் நெசவு செய்கிறார்கள்.

6. உசிலம்பட்டி:— இது ஒரு யூனியன் பட்டணம். இங்கு டிவிஷ னல் ஆபீஸர் கச்சேரியும், ஹைஸ்கூலு மிருக்கின்றன. இங்குக் கவர்ன் மெண்டார் ஜனங்களின் நன்மைக்

காக ஒரு விவசாயப் பள்ளிக்கூடத்தையும் ஏற்படுத்தி இருக்கிறார்கள். இங்கே புதன்கிழமை தோறும் ஒரு பெரிய சந்தை கூடும்.

7. நடுக்கோட்டை, மேலக்கோட்டை, உத்தமநாயக்கனூர், எழுமலை, சாப்டூர், பேரையூர், தொட்டப்பநாயக்கனூர், சந்தையூர் முதலியன இத்தாலூகாவில் முக்கிய ஜமீன் ஊர்கள்.

III. பெரியகுளம் தாலூகா

இது நமது ஜில்லாவில் தென்மேற்குப் பாகத்திலிருக்கிறது. நமது ஜில்லாவிலுள்ள மற்றெல்லாத்தாலூகாக்களிலும் இது பெரிது; மிகவும் செழிப்பானது. இதற்கு ஆதியில் தென்கரைத்தாலூகா என்பது பெயர். பெரியாற்றின் ஜலத்தை வைகையில் திருப்பி விட்டதின் காரணமாக இத்தாலூகாவின் தென்பாகம் செழிப்பாயிருக்கிறது. இந்தத் தாலூகாவில் மேற்கிலும் கிழக்கிலும் மலைவரிசைகளைப் பாருங்கள். இங்கே ஜனத்தொகை குறைவு. ஏன்? இத்தாலூகாவின் பெரும்பான்மையான பாகம் மலை அடர்ந்ததாகவும் பீடபூமி நிறைந்ததாகவும் உள்ளது. வைகை நதியும் அதன் உபநதிகளாகிய சுருளி, வராகநதி முதலியவையும் பாயப்பெற்ற பிரதேசத்தில் நெல்லும், செம்மண்தரை யுள்ள மேட்டு நிலங்களில் எள்ளு, பயறுகள், துவரை, சோளம், கேப்பை, பருத்தி முதலியவைகளும் பயிராகின்றன. மலைச்சாரல்களில் காப்பி, ஏலக்காய் விளைகின்றன. மலைக்காடுகளில் சந்தன மரமும், கட்டடங்களுக்கு வேண்டிய தேக்கு முதலிய மரங்களும் கிடைக்கின்றன.

1. பெரியகுளம்:— இது வராகநதிக்கரையிலிருக்கிறது. இங்கே ஒரு ஹைஸ்கூலும், தாலூகாக் கச்சேரியும், சப்ரிஜிஸ்டர் ஆபீசும் இருக்கின்றன. இங்குள்ள ஜனங்கள் பாத்திரங்களும், நெசவுத்தொழிலும் செய்கிறார்கள். இது ஒரு முனிசிபல் பட்டணம். இதன் ஜனத்தொகை சுமார் 23000.

2. தேனி:— இது யூனியன் டவுன். ஞாயிற்றுக்கிழமை தோறும் இங்கே பெரிய சந்தை கூடும். இத்தாலூகாவில் இது முக்கிய வியாபார ஸ்தலம். நகரத்துக்கு 2 மைல் தூரத்தில் தேனி நதியும், சுருளி நதியும் கலக்கின்றன. அதற்கும் கிழக்கே 2 மைல் தூரத்தில் வைகை, சுருளி நதிகள் சந்திக்கின்றன.

3. சின்னமனூர்:—இது ஒரு யூனியன் பட்டணம். இங்குப் பிராமணர்களும், மகமதியர்களும் அதிகமாய் வசிக்கிறார்கள்; நெல் விளைவு அதிகம். இராஜசிம்ம பாண்டியனால் கட்டப்பட்ட ஒரு கோவில் இங்கு இருக்கிறது.

4. கம்பம்:—இது ஒரு யூனியன் பட்டணம். இதில் வசிக்கும் ஜனங்களில் பெரும்பாலோர் கன்னடம் பேசும் காபிலியர்கள். இது ஒரு பள்ளத்தாக்கிலிருக்கிறது. இந்தப் பள்ளத்தாக்கு அதிகக் குளிர்ச்சியும் ஈரமும் பொருந்தியது. தொத்து வியாதிகள் உண்டாகும் இடம் இது. இப்பிரதேசத்தைச் சுற்றிலும் விளைகிற தானியங்களின் வியாபாரத்துக்கு இது ஒரு மத்திய ஸ்தலமாக இருக்கிறது. இதன் கிழக்கிலும் மேற்கிலும் அடர்ந்த காடுகளிருக்கின்றன.

5. கூடலூர்:—இது ஒரு யூனியன் டவுன். இங்கு ஒரு அழகர் கோவிலிருக்கிறது. இங்கிருந்து பெரியாற்று அணைக்குப் போகலாம்.

6. உத்தமபாளையம்:— இது சுருளி நதியின் தென்பாகத்திலிருக்கிறது. இதில் ஒரு டிப்டி தாசில்தார் ஆபீசும், சப்ரிஜிஸ்டர் ஆபீசும், பிரயாணிகள் தங்குவதற்கு ஒரு சத்திரமும் இருக்கின்றன. இங்குள்ள காளாஸ்திரி கோவிலும், திரௌபதை அம்மன் கோவிலும் பேர் போனவை. இங்கே பெரியாற்று நீர் பாய்வதால் நிலங்கள் வளம் பெற்று நெல் அதிகமாக விளைகிறது.

7. கோம்பை:—இது இத் தாலூகாவின் மலை மீதுள்ளது. இது சிறந்த நாய்களுக்குப் பெயர்போனது.

8. போடி நாயக்கனூர்:— இது ஒரு முனிசிபல் பட்டணம். இங்கே ஒரு ஹைஸ்கூல் இருக்கிறது. இது, தேயிலை, காப்பி, ஏலக்காய்த் தோட்டங்களுக்குப் போகும் பாதையிலிருப்பதால் வியாபாரத்தில் முன்னேற்றமடைந்து வருகிறது. இங்குள்ள(Rope Way)கம்பிப்பாதையில் தேவிகுளம் மலையில் விளையும் பொருள்கள் இறக்குமதி செய்யப்படுகின்றன. இதன் ஜனத்தொகை சுமார் 27000.

IV. கொடைக்கானல் தாலூகா

இது நமது ஜில்லாவில் மேற்கிலிருக்கிறது. இதுவே நமது ஜில்லாவில் மிகவும் மலையடர்ந்த தாலூகா.

1. கொடைக்கானல்:—இது சமுத்திர மட்டத்துக்கு மேல் சுமார் 7500 அடி உயரத்திலிருக்கிறது. இங்குத் தனவந்தர்கள் கோடைக்காலத்தில் சௌகரியத்திற்காகச் செல்லுகிறார்கள் என்று படித்தீர்கள். இதைச் சுற்றிலுமுள்ள பிரதேசங்களில் இங்லீஷ் காய்கறிகளும் முட்டைக்கோஸ் கீரையும் பழ வர்க்கங்களும் பயிராகின்றன. இங்குள்ள காடுகளில் சிங்கோனா, கற்பூரம் முதலிய மரங்களைக் காணலாம். இது ஒரு முனிசிபல் பட்டணம். இதன் ஜனத்தொகை 6523.

2. பூம்பாறை:—இது கொடைக்கானலுக்கு வடமேற்கில் 10 மைல் தூரத்திலிருக்கிறது. இங்கே பலிஞர்கள் இருக்கிறார்கள்; காப்பிக் கொட்டை, வெள்ளைப் பூண்டுகள் இங்கு விளைகின்றன.

3. தாண்டிக்குடி:—இங்கே பூர்வீகக் கல்லறைகள் இருக்கின்றன.

4. பண்ணைக்காடு:— இங்குக் காப்பி, ஏலம், கடுக்காய், வாழைப்பழம், ஆரஞ்சுப் பழம் ஏற்றுமதியாகின்றன.

5. செம்பகனூர்:— இங்குக் காய்கறித் தோட்டங்களும், சோலைகளும் அதிகம்.

V. பழனித் தாலூகா

இது நமது ஜில்லாவில் வடமேற்கிலிருக்கிறது. இது தெற்கே உயர்ந்தும், வடக்கே சரிவாகவுமிருக்கிறது. இதன் தென் பாகத்தில் செல்லும் மலைத்தொடருக்குப் பழனிமலை யென்பது பெயர். இதில் செல்லும் இருப்புப்பாதை மார்க்கம் இதன் நடுவில் கிழக்கு மேற்காகச் செல்லுகிறது. இத் தாலூகா மற்றெல்லாத் தாலூகாக்களைவிட மிகவும் வறட்சியானது. இங்கு மழை மிகக்குறைவு. இது செம்மண் நிறைந்த பிரதேசம். இங்

குக் கிணற்று நீர் பாய்ச்சிச் சோளம், கம்பு, கேப்பை, புகையிலை, பருத்தி முதலியன சாகுபடி செய்கிறார்கள். இங்குள்ள நதிகளில் ஷண்முக நதி விசேஷமானது. அந்நதி செல்லுமிடங்கள் வண்டல்கள் நிரம்பியுள்ளன; நெல், வெற்றிலை சாகுபடி செய்யப்படுகின்றன.

1. பழனி:— இது இத் தாலூகாவின் முக்கிய பட்டணம். இதன் ஜனத்தொகை 18899. இது ஒரு முனிசிபல் நகரம். இங்குள்ள சுப்பிரமணியர் கோவில் மிகவும் பிரசித்தி பெற்றது. இங்குத் தாலூகாக் கச்சேரியும், முனிசிபல் ஹைஸ்கூலும், அநேக சத்திரங்களு மிருக்கின்றன. இது ஒரு வியாபார ஸ்தலம். இங்கு மலைமீதுள்ள பழனியாண்டவர் தரிசனத்துக்குப் பலஊர்களிலிருந்தும் ஏராளமான ஜனங்கள் எப்பொழுதும் வந்து கொண்டிருக்கிறார்கள்.

2. கீரனூர்:— கீரனூர் பழனிக்கு வடக்கே சுமார் 10 மைல் தூரத்தில் இருக்கிறது. இங்கே மகமதியர் அதிகம். இது ஷண்முகநதிக் கரையிலிருப்பதால் நெல், புகையிலை, வெற்றிலை முதலிய வியாபாரத்துக்குப் பெயர் போனது.

3. விருப்பாக்ஷி:— இது வாழை, பலாப் பழத்துக்குப் பேர்போனது; வியாழக்கிழமை தோறும் சந்தை கூடும்.

4. ஆய்க்குடி, மாம்பாறை, இடையகோட்டை ஆகிய இவைகள் இத் தாலூகாவிலுள்ள முக்கிய ஜமீன்கள்.

VI. திண்டுக்கல் தாலூகா

இது நமது ஜில்லாவின் வடக்கிலிருக்கிறது. இத் தாலூகா, தெற்கிலுயர்ந்தும், வடக்கில் தாழ்ந்துமிருக்கிறது. இது ஒரு மேடான பிரதேசம். மழை மிகவும் குறைவு. இதன் தெற்கிலுள்ள மலைகளில் வாழை விசேஷம். இங்குள்ள தரை செம்மண் பூமி. ஆகையால் வேர்க்கடலை, கொட்டைமுத்து, உளுந்து, துவரை, புகையிலை முதலானவை விசேஷமாய்ப் பயிராகின்றன. இதன் எல்லைகளையும், இங்கு ஓடும் நதிகளையும் படத்தில் பார்த்துச் சொல்லுங்கள்.

1. திண்டுக்கல்:— இது இத்தாலூகாவின் தலை நகர். இங்குச் சப் கலெக்டர் இருக்கிறார். இங்கே இரண்டு ஹைஸ்கூல்களும், ஒரு டிரெயினிங் ஸ்கூலும், தாலூகாக் கச்சேரியுமிருக்கின்றன. இங்கிருந்து சுருட்டு, தோல், வெண்கலப் பாத்திரங்கள், இரும்புப் பெட்டிகள், பூட்டுகள் முதலியவை ஏற்றுமதியாகின்றன. இதன் ஜனத்தொகை 43617. இது ஒரு முனிசிபல் பட்டணம். இங்குள்ள குன்றின்மேல் ஒரு கோட்டை இருக்கிறது. முற்காலத்தில் பல முறை யுத்தம் நடந்த இடம் இது.

2. அய்யம்பாளையம்:— இது யூனியன் டவுன். இங்கே தேங்காயும், மாம்பழமும், மலையில் விளையும் பொருள்களும் ஏற்றுமதியாகின்றன.

3. பலக்கனூத்து:— இது திண்டுக்கல்லிலிருந்து பழனிக்குப்போகும் பாதையிலிருக்கிறது. இதில் ஒரு சத்திரமும், முசாபரி பங்களாவும் உண்டு. இங்கேயுள்ள செம்மண்ணில் தங்கத்தூள் கலந்திருப்பதாகச் சொல்லுகிறார்கள்.

4. அகரம்:— இங்குள்ள முத்தாலம்மன்கோவில் உற்சவம் விசேஷம்.

5. வேடசெந்தூர்:—இது ஒரு யூனியன் பட்டணம். இங்கே டிப்டி தாசில்தார் ஆபீசும், மற்ற ஆபீசுகளும் இருக்கின்றன. இங்கு நெல்லும், புகையிலையும் விசேஷமாய் விளைகின்றன. வாரந்தோறும் ஒரு பெரிய சந்தை கூடுகிறது.

6. தாடிக்கொம்பு:— இது ஒரு விஷ்ணு ஸ்தலம்; திண்டுக்கல்லுக்கு வடக்கே 6 மைல் தூரத்திலுள்ளது. இங்குச் சித்திரை மாதம் தோறும் பெரிய உற்சவம் நடைபெறுகிறது.

VII. நிலக்கோட்டைத் தாலுகா

இது நமது ஜில்லாவின் நடுவிலிருக்கிறது. இதைச் சுற்றிலும் உள்ள தாலுகாக்களைப் படத்தில் பார்த்துச் சொல்லுங்கள். இத் தாலுகாவில் பெயர்பெற்ற பேரணையும் சிற்றணையும் இருக்கின்றன. நான்கு பக்கங்களிலு முள்ள மலைகளைப் படத்தில் பாருங்கள். பழனிமலையிலிருந்து இங்கு வரும் மஞ்சள் ஆற்றில் வருடமுழுதும் தண்ணீர் ஓடுகிறது.

1. நிலக்கோட்டை:—இது இந்தத் தாலுகாவின் தலை நகரம். இங்கே தாலுகாக் கச்சேரியும், பல ஆபீசுகளுமிருக்கின்றன. இங்கே பாத்திரங்கள் செய்யப்படுகின்றன.

2. அம்மையநாயக்கனூர்:— இது ஒரு ரெயில்வே ஸ்டேஷன். இதிலிறங்கிக் கொடைக்கானல் மலைக்கு ஜனங்கள் செல்லுகிறார்கள். இது 1736-ம் வருடம் மகமதிய அரசர்களுக்கும், நாயக்க மன்னர்களுக்கும் யுத்தம் நடந்த இடம். இது மலைகள் நிறைந்த இடம்.

3. குலசேகரன்கோட்டை:—இது சிறுமலையின் அடிவாரத்திலிருக்கிறது. இங்கே பெரிய குகைகளும் கல்லறைகளும் இருக்கின்றன.

4. சோழவந்தான்:—இது வைகை யாற்றின் கரையிலிருக்கிறது. இது ஒரு செழிப்பான ஊர். இங்கே தென்னந் தோப்புகளும், நெல் வயல்களும் அதிகம். இதில் ஒரு ஹை ஸ்கூல் இருக்கிறது.

5. பேரணை:— இங்கே வைகை யாற்றில் அணை கட்டி, பெரியாற்றுத் தண்ணீரைத் தேக்கிப் பல பாகங்களுக்கும் அனுப்புகிறார்கள். இங்குள்ள அநுமார் கோவில் விசேடமானது.

6. வத்தலக்குண்டு:— இது இத் தாலுகாவிலுள்ள பெரிய ஊர். இது கொடைக்கானல் மலைக்குப் போகிற வழியிலிருக்கிறது. இங்கு ஒரு விதமான சம்பா நெல் விசேடமாக விளைகிறது. இங்கே ஒரு ஹை ஸ்கூலும் இருக்கிறது.

VIII. மேலூர்த் தாலுகா

இது நமது ஜில்லாவின் கிழக்குப் பாகத்தி லிருக்கிறது. இதன் தென்பாகம் பெரியாற்றுக் கால்வாயின் ஜலத்தினால் செழிப்பாயிருக்கிறது. வடபாகம் ஒரு மேட்டுப்பிரதேசம். இதன் மேற்கு எல்லையாயுள்ள தாலுகாக்களைச் சொல்லுங்கள். இதன் தென் பாகத்தில் நெல்லும், வடபாகத்தில் கொட்டைமுத்து, சோளம், கேப்பை, பயறு வகைகளும் விசேஷமாய்ப் பயிராகின்றன. இத் தாலுகாவில் 5ல் ஒரு பாகம் காடுகள். அங்கிருந்து விறகு ஏராளமாக வெட்டப்படுகின்றன. வடபாகத்தில் புளியந் தோப்புகள் அதிகம். இத் தாலுகாவிலுள்ள திருமணி முத்தாறு, பாலாறு

ஆகிய இவைகளின் ஓரங்களில் தென்னந் தோப்புகள் அதிகம்.

1. மேலூர்:—இது ஒரு டிப்டி கலெக்டர் டிவிஷன். ஆனால் ஆபீஸ் மதுரையிலிருக்கிறது. இங்கு ஒரு ஹைஸ்கூலும் தாலூகாக் கச்சேரியும், மற்ற ஆபீஸ்களு மிருக்கின்றன; நெல் விளைவு அதிகம். இங்கே கள்ளர்கள் மிகுதி.

2. திருவாதவூர்:—இது மேலூருக்குத் தெற்கே 5 மைல் தூரத்திலிருக்கிறது. இது மாணிக்கவாசகர் என்ற சிவபக்தர் பிறந்த இடம்.

3. அழகர்மலை:—இது மதுரைக்கு வடக்கே சுமார் 12 மைல் தூரத்தில் உள்ளது. இம்மலையின் அடிவாரத்தில் அழகர் கோயிலிருக்கிறது. இங்குள்ள அழகிய மூர்த்தியைத் தரிசிக்கத் தினந்தோறும் யாத்திரிகர்கள் வருகிறார்கள். இங்குச் சித்திரை, ஆடி மாத உற்சவங்கள் நடக்கும். இம்மலையில் மருந்துக்கான மூலிகைகள் கிடைக்கின்றன.

4. நத்தம்:—இது திருமணி நதிக் கரையிலுள்ள ஒரு யூனியன் டவுன். இது சிறுமலைக்கும் அழகர் மலைக்கும் மத்தியில் உள்ள கணவாயில் இருக்கிறது. இங்கு எண்ணெய் வியாபாரம் அதிகம்.

5. கோட்டாம் பட்டி:—இதனருகில் உள்ள பாறைகளில் இரும்பு அகப்படுவதாகச் சொல்லுகிறார்கள். இதன் வடக்கில் பாலாறு ஓடுகிறது. இரு கரைகளிலும் தென்னந்தோப்புகள் அதிகம்.

பயிற்சி

1. நமது ஜில்லாவை எத்தனைத் தாலூகாக்களாகப் பிரித்திருக்கிறார்கள்?
2. நமது தாலூகாக்களில் எது மிகப் பெரியது?
3. நடுவில் உள்ள தாலூகா எது?
4. எத் தாலூகாவில் கரிசல் மண் அதிகம்?
5. எத் தாலூகாக்களில் செவ்வல் மண் பிரதேசம் நிறைந்திருக்கிறது?
6. பெரிய குளம் மிக்க செழிப்புள்ள தாலூகாவான போதிலும் அதற்குத் தகுந்த ஜனத்தொகை அதிகமில்லை. ஏன்?
7. ஜன நெருக்கமுள்ள தாலூகாக்கள் யாவை?
8. மலையடர்ந்த தாலூகா எது?
9. தேனியிலிருந்து தெற்கே பெரியாற்று ஏரிக்குச் செல்லும் ரஸ்தாவின் மேல் உள்ள பட்டணங்கள் மூன்று சொல்லுக.
10. பெரிய குளம் தாலூகாவில் மழை குறைவு. ஏன்?
11. இந்த ஜில்லாவில் மிகவும் வறட்சியான தாலூகா எது? அதில் உள்ள மூன்று பட்டணங்கள் சொல்லுக.
12. திருமங்கலம் தாலூகாவில் உள்ள ஜமீன் ஊர்கள் யாவை?
13. கன்னிவாடி, திருவாதவூர், கூடலூர் ஆகிய இவை எந்தத் தாலூகாக்களில் இருக்கின்றன? இவற்றின் விசேஷமென்ன?
14. நத்தம், வத்தலக்குண்டு ஆகிய இவை எவற்றிற்குப் பேர் போனவை?

இருபதாம் பாடம்

போக்கு வரவு சாதனங்கள்

சிறுவர்களே, இந்த ஜில்லாவின் முக்கியமான தோற்றங்களை ஒருவன் அறிய விரும்பினால், அதைச் சுற்றிப் பார்ப்பது அவசியமாகிறது. அப்படிப் பிரயாணம் செய்வதற்குப் பல வசதிகள் இருக்கின்றன. அவை

மதுரை நகரம்



1. ரேஸ் கோர்ஸ்
3. சொக்கி குளம்
9. அமெரிக்கன் காலேஜ்
10. தமுக்கம் ரோட் டப்ரின் பார்க்
11. கலெக்டர் பங்களா
12. தல்லாகுளம் கண்வாய்
14. மதுரை ஜில்லா போர்டு ஆபீஸ்
மதுரை வைகையாறு, பாலம்
18. கோச்சடை பம்பிங்ஸ்டேஷன்
19. ஆரப்பாளையம் பம்பிங் ஸ்டேஷன்
22. ராஜா மில்ஸ்
25. ஹார்வி மில்ஸ்
26. ரயில்வே ஸ்டேஷன்
28. பசுமலை
29. மதுரைக் காலேஜ்
31. கூடலழகர் கோவில்
32. கவர்ன்மெண்டு ஆஸ்பத்திரி
33. மதுரை மீனாக்ஷி கோவில்
35. திருமலை நாயக்கர் மஹால்
36. அவனியாபுரம்
39. பாண்டியன் மில்ஸ்
43. மாரியம்மன் தெப்பக்குளம்

யாவன (1) கடல் மார்க்கம், (2) சாலை மார்க்கம், (3) இருப்புப் பாதை மார்க்கம்.

நமது ஜில்லாவுக்குக் கடற்கரை இல்லாததால், கடலின்மூலம் போக்கு வரவு இல்லை. நாம் சாலைகள் மார்க்கமாகவும், ரயில் மார்க்கமாகவும் நமது ஜில்லாவைச் சுற்றிப் பார்க்கலாம். நமது ஜில்லாவில் பெரிய ரஸ்தாக்களும், கிளை ரஸ்தாக்களும் அநேகம் இருக்கின்றன. பெரிய ரஸ்தாக்களின் நீளம் 1210 மைல். இருப்புப்பாதை நமது ஜில்லாவில் தெற்கு வடக்காகச் சுமார் 100 மைலும், கிழக்கு மேற்காகச் சுமார் 70 மைல் தூரமும் செல்லுகிறது.



மோட்டார் கார்

நாம் ஒரு மோட்டாரில் ஏறிச் செல்லுவோம்.

மதுரை மாநகரம்

நமது ஜில்லாவுக்கு முக்கிய பட்டணம் மதுரை நகர் ஆகும். இது வைகையாற்றின் கரையில் இருக்கிறது. மதுரைக்குப் பல திக்குகளி



மதுரை டவுன்

லிருந்தும் இருப்புப்பாதை மூலமாகவும், ரஸ்தா மூலமாகவும் வந்து சேரலாம்.

நாம் ஊரைச் சுற்றிப் பார்ப்போம். மீனாட்சி அம்மன் கோவில் இந் நகரின் நடுவில் இருக்கிறது. சுமார் 150 அடி உயரமுள்ள நாலு கோபுரங்கள் இதன் நாலு வெளி வாசல்களிலும்



பொற்றாமரைக்குளம்

இருக்கின்றன. கோவிலின் உள்ளேயுள்ள சித்திரப் பதுமைகளும், கற்சிலைகளும் கண்களைக் கவருகின்றன. ஆயிரக்கால் மண்டபம், அழகிய கற் பதுமைகளுள்ள தூண்களால் நிறைந் திருக்கின்றது. பொற்றாமரைக் குளம் என்ற புண்ணிய தீர்த்தமும், கலியாண மண்டபமும் மிகவும் அழகாய் அமைந்திருக்கின்றன.

கோவிலைச் சுற்றிலும் நான்கு பக்



புது மண்டபம்

கங்களிலும் வீதிகள் இருக்கின்றன. அவைகள், சித்திரை வீதி, ஆவணி மூல வீதி, மாசி வீதி, வெளி வீதி என்பன.

கிழக்குக் கோபுர வாயில் வழியாய்க் கிழக்குச் சித்திரை வீதிக்குப் போவோம். புது மண்டபத்தைப் பாருங்கள். அங்கே அநேக புஸ்தகக் கடைகளும், பாத்திரக் கடைகளும், ஜவுளிக் கடைகளும் இருக்கின்றன. இதன் நடுப்பத்தியில் உள்ள தூண்களில் மதுரையை முன் காலத்தில் ஆண்ட நாயக்க மன்னர்களின் சிலைகளைக் காணலாம். அவற்றில், திருமலை நாயக்கர் சிலையைப் பாருங்கள். இம் மண்டபம் அவரால் கட்டப்பட்டது.

தெற்குச் சித்திரை வீதிக்கு வருவோம். அங்கே திருமலை நாயக்கரால் கட்டப்பட்ட ஒரு கட்டிடம் இருக்கிறது. அதில் அநேக கச்சேரிகள் இருக்கின்றன.

இப்பொழுது மேலைச் சித்திரை வீதிக்கு வருவோம். இங்கு ஜவுளிக் கடைகளும், வெள்ளிப் பாத்திரக் கடைகளும் விசேஷமா யிருக்கின்றன.



ஹால் பார்க்

அங்கிருந்து வடக்குச் சித்திரை வீதிக்கு வருவோம். இங்கே மருந்து ஷாப்புகளும், புஸ்தக ஷாப்புகளும், வெங்கலக் கடைகளும் இருக்கின்றன. மங்கம்மாளின் பழைய அரண்மனையைப் பாருங்கள். அதில் இப்பொழுது ஸெண்ட்ரல் மார்க்கெட்டும், போஸ்டாபீசும் இருக்கின்றன. அதற்கு எதிரில் 'ஹால் பார்க்' என்னும் சிங்காரத் தோட்டம் இருக்கிறது. ஜனங்கள் இங்கு மாலையில் நல்ல காற்று வாங்க வருகிறார்கள்.

அங்கிருந்து கீழாவணி மூல வீதிக்கு வருவோம். இங்குக் கடைகளையும் அழகிய வீடுகளையும் பாருங்கள். இங்கே இராயகோபுரம் இருக்கிறது. இக்கோபுரம் முழுவதும் கட்டி முடித்திருந்தால் உலகத்தி லுள்ள கோபுரங்கள் எல்லாவற்றிலும் பெரிதாகச் சிறந்து விளங்கும். இது திருமலை நாயக்கரால் கற்களாலேயே கட்டப் பெற்றுள்ளது.

தெற்கு ஆவணி மூல வீதியில் உள்ள திருஞான சம்பந்தர் மடத்தைப் பார்த்தோம். மேல ஆவணி மூல வீதியிலுள்ள எட்வர்டு பார்க் என்னும் சிங்காரத் தோட்டத்தைப் பாருங்கள்.

அங்கிருந்து வடக்கு ஆவணி மூல வீதிக்கு வருவோம். இங்கே, முனிஸிபல் ஆஸ்பத்திரி இருக்கிறது. ஆவணி மாதத்தில் நடைபெறும் பிட்டுத்திருவிழாக் காலத்தில் சுவாமி இந்த நான்கு ஆவணி மூல வீதிகளின் வழியாய் வருவது வழக்கம்.

நாம் இப்பொழுது கீழமாசி வீதிக்கு வருவோம். இங்குள்ள சிங்காரத் தோட்டத்தைப் பாருங்கள். இங்கே, எங்குப் பார்த்தாலும் கடைகள் காணப்படுகின்றன. மூங்கில் கடைகள், இரும்புக் கடைகள், பலசரக்குக் கடைகள், பழக்கடைகள், புஷ்பக்கடைகள், ஜவு

ளிக் கடைகள் ஆகிய இவைகளைப் பார்க்கலாம். இங்கே இரண்டு தேர்கள் நிற்கின்றன. சித்திரைத் திருவிழாவில் மீனாட்சி சுந்தரேசுவரர் இத்தேர்களில் நான்கு மாசி வீதிகளிலும் வருவது வழக்கம்.

பிறகு தெற்குமாசி வீதிக்குத் திரும்புவோம். இங்கே பெரிய விளக்குத் தூண் இருக்கிறது. இரவில் இதன் வெளிச்சத்தில் சில்லறை வியாபாரிகள் ஜவுளி வியாபாரம் செய்கிறார்கள்.

இங்கிருந்து மேல மாசி வீதிக்கு வருவோம். இதன் தென்மேற்கு மூலையில் கூடலழகர் கோவிலும், நன்மை தருவார் கோவிலும் இருப்பதைப் பாருங்கள்.

அங்கிருந்து வடக்கு மாசி வீதிக்கு வருவோம். இங்கே யாதவர்களின் கிருஷ்ணன் கோவில் இருப்பதைக் காணலாம்.

அங்கிருந்து கிழ வெளி வீதிக்கு வருவோம். இங்கே, நெல் பேட்டை



திருமலை நாயக்கர் மஹால்

களும், மார்க்கெட்டும், ஸெயிண்டு மேரி மாதா கோவிலும், ஸெயிண்டு மேரி ஹை ஸ்கூலும் இருக்கின்றன. இவ்வீதியில் மிஷன் ஆஸ்பத்திரி ஒன்று இருக்கிறது. மேல் பக்கத்திலுள்ள முனிஸிபல் ஆபீஸைப் பாருங்கள். அதை அடுத்துத் திருமலை நாயக்கர் மஹால் இருக்கிறது. இது ஒரு பெரிய கட்டிடம். இங்குள்ள ஆகாய மளாவிய தூண்களைப் பாருங்கள். இதில் இராமநாதபுரம் ஜில்லா, செஷன்ஸ் கோர்ட்டுகளும், அநேக கச்சேரிகளும் இருக்கின்றன. இது நமது தேசத்திலுள்ள சிறந்த கட்டிடங்களில் ஒன்று. இதைப் பல தேசங்களின் ஜனங்களும் வந்து பார்த்து மகிழ்ச்சி யடைகிறார்கள்.

பிறகு, தெற்கு வெளி வீதிக்கு வருவோம். இங்கே முனிஸிபல் மாடல் ஸ்கூல் இருக்கிறது. கல்வி கற்றல், நீந்துதல், பலவிதக் கைத்தொழில்களைப் பழகுதல் இந்தப் பள்ளிக் கூடத்தில் கற்றுக்கொடுக்கிறார்கள்.

அங்கிருந்து மேல வெளி வீதிக்குச் செல்லுவோம். அங்குக்கவர்ன்மெண்டு ஆஸ்பத்திரியைக் காணலாம். யு. ஸி. ஹைஸ்கூல், எ. ஆர். ஹைஸ்கூல் ஆகிய இவைகளைப் பார்த்துவிட்டு, எட்வர்டு ஹாலுக்கு வருவோம். இங்கு ஒரு இலவசப் புத்தக சாலை இருக்கிறது. இதில் அநேகர் வந்து பத்திரிகைகளையும் புத்தகங்களையும் படித்துக்கொண் டிருப்பார்கள். சற்றுத் தூரத்தில் மங்கம்மாள் சத்திரம் இருக்கிறது. அதில் வாடகை கொடுத்து, வெளியூர் வாசிகள் தங்குவார்கள். அதற்கு அருகில் குஜராத்திகள் சத்திரம் ஒன்று இருக்கிறது. இதனை அடுத்து வாட்டர் பம்பிங் ஸ்டேஷனும் பல ஒர்க் ஷாப்புகளும் இருக்கின்றன.

அங்கிருந்து வடக்கு வெளி வீதிக்கு வருவோம். அங்கு ஜெனரல் போஸ்ட் ஆபீஸையும், அதற்குச் சமீபத்தில்

சேதுபதி ஹைஸ்கூலையும் பார்க்கலாம். இவ்வீதியில் காலஞ் சென்ற ஸ்ரீமான் பாண்டித்துரைசாமித் தேவரவர்களால் ஏற்படுத்தப்பட்ட தமிழ்ச் சங்கம் இருக்கிறது. இங்கு அநேக ஏழை மாணவர்களுக்குச் சாப்பாடு கொடுத்துத் தமிழ்க்கல்வி கற்பிக்கிறார்கள். இதில் படித்த அநேகர் சிறந்த தமிழ்ப் புலவர்களாக விளங்குகிறார்கள்.

அங்கிருந்து மேற்கே ஹார்வி மில்ஸ் என்ற பஞ்சாபீசுக்கு வருவோம். இதில் பல ஆயிரக்கணக்கான ஜனங்கள் வேலை செய்கிறார்கள். இயந்திரங்களினால் நூல் நூற்கும் விந்தையைப் பாருங்கள். இங்கே நூற்கும் நூல் மதுரையிலுள்ள நெசவுக்காரர்



ஹார்வி மில்ஸ்

களுக்கு விற்கப்படுவதோடு வெளியூர்களுக்கும் ஏற்றுமதி செய்யப்படுகிறது.

அப்பால், ஆரப்பாளையம், கோச்சடை பம்பிங் ஸ்டேஷன்களுக்குப் போவோம். இங்கே இயந்திரம் வைத்து, வைகை ஆற்று ஜலத்தைக் கிணற்றிலிருந்து இறைத்துக் குழாய்களின் மூலமாய் அந்த ஜலம் மதுரை வாசிகள் உபயோகத்திற்காகக் கொண்டுபோகப்படுகிறது.

பம்பிங் ஸ்டேஷன்களைப் பார்த்தோம். வரும் வழியில் பெண்கள் டிரெயினிங் ஸ்கூல் இருப்பதைப் பாருங்கள். இதனருகில் ராஜா மில்ஸ் என்ற பஞ்சாபீஸைக் காணலாம்.

அதிலிருந்து கிழக்கே சென்று



வைகையாற்றுப் பாலம்

வடக்கே திரும்புவோம். அங்கே வைகையாறு ஓடுகிறது. வைகை ஆற்றையும் பாலத்தையும் பாருங்கள். ஆற்றைக் கடக்கப் பாலத்தின் வழியே செல்லுவோம். ஆற்றின் வடகரையில் மதுரை ஜில்லா போர்டு ஆபீஸ் கட்டிடம் தெரிகிறது. இது மிகவும் அழகான கட்டிடம். அதற்கு வடக்கில் உள்ள அமெரிக்கன் காலேஜைப் பாருங்கள். இங்கே ஒரு மிஷன் ஹைஸ்கூலும் இருக்கிறது.

இனித் தமுக்கம் செல்லுவோம். அங்கே டப்ரின் பார்க் என்ற ஒரு சிங்காரத்தோட்டம் இருப்பதைப் பார். பக்கத்தில் ஒரு பங்களா இருக்கிறது. அதில் இப்பொழுது மதுரை ஜில்லாக் கலெக்டர் வசித்து வருகிறார். இக்கட்டிடம் திருமலை நாயக்கரால் தமது கோடைக்கால வசதிக்காகக் கட்டப்பெற்றது. இக்கட்டிடத்தை ஆற்காட்டு நவாபு, தாம் ஆண்ட காலத்தில் ஒரு துரைக்கு இனாமாகக் கொடுத்தார். அந்தத் துரை இதன் வாடகையைப் படிப்புக்குச் செலவு செய்

யும்படி சர்க்காருக்கு அநுமதி கொடுத்தார். இதன் வாடகையில் ரூ. 480, வருடந்தோறும் சென்னை யுனிவர்ஸிடிக்குச் சர்க்கார் அனுப்புகிறார்கள்.

இதற்குப் பக்கத்தில் மிருக வைத்திய சாலையும் இருக்கிறது. சற்றுத் தூரத்தில் தாலூகாக் கச்சேரியும், மதுரை, இராமநாதபுரம் ஜில்லா கலெக்டர்கள் ஆபீஸுகளும் இருக்கின்றன.

அப்பால், தல்லாகுளம் என்ற பெரிய கண்மாய் தெரிகிறது. அதற்கும் வடக்கில் ரேஸ்கோர்ஸ் என்ற மைதானம் இருக்கிறது. அங்கேயுள்ள சிங்காரத் தோட்டத்தைப் பாருங்கள். இதில் நமது நகர ஜனங்கள் மாலையில் வந்து நல்ல காற்று வாங்குவார்கள்.

இதற்குச் சற்று மேற்கே செல்லுவோம். இங்கு ஒரு குளம் காணப்படுகிறது. இதைச் சொக்கிகுளம் என்று சொல்லுவார்கள். பெண் பிள்ளைகளுக்கான மிஷன் ஹைஸ்கூல் இங்கு இருக்கிறது. இதனருகில் புதிதாக அநேக பங்களாக்கள் கட்டிக்கொண்டு ஜனங்கள் வசிக்கிறார்கள்.

தல்லாகுளத்திலிருந்து ரஸ்தாக்கள் நான்கு பிரிவாகப் பிரிகின்றன. ஒரு ரஸ்தா வடக்காக நத்தத்துக்கும், ஒரு ரஸ்தா வடகிழக்காக அழகர் கோவிலுக்கும், ஒரு ரஸ்தா மேலூருக்கும், மற்றொரு ரஸ்தா கிழக்காகச் சிவகங்கைக்கும் செல்லுகின்றன.

இனி ஆற்றுப்பாலத்தைக் கடந்து, திரும்பி வந்து, கிழக்கே செல்லுவோம். வழியில் சௌராஷ்டிர ஹைஸ்கூலையும், அதற்குச் சமீபத்தில் பனியன்கள் நெசவு செய்யும் தொழிற்சாலையையும்காணலாம். அதற்கும் கிழக்கில் மாரியம்மன் தெப்பக்குளம் என்ற ஒரு பெரிய தெப்பக்குளம் இருக்கிறது. இது திருமலைநாயக்கரால் மிக்க அழகாகக் கட்டப்பெற்றது.



பெரிய தெப்பக்குளம்

இதன் மத்தியில் அழகான மண்டபமும், அதில் சிங்காரத் தோட்டமும் இருக்கின்றன. இதன் வடகிழக்கு மூலையில் மாரியம்மன் கோவில் இருக்கிறது. இங்கிருந்து ஒரு ரஸ்தா கிழக்காக இராமநாதபுரத்துக்குச் செல்லுகிறது.

தெப்பக் குளத்திலிருந்து தென்மேற்காக மதுரைக்குத் திரும்பி வருவோம். பாதையில் ஒரு பெரிய ஆலமரம் தெரிகிறது. அதன் நிழல் வெகு தூரம் பரவிக் குளிர்ச்சியா யிருக்கிறது. சற்றுத் தூரத்தில் பாண்டியன் மில்ஸ் என்ற பஞ்சு ஆபீஸைப் பாருங்கள். அங்கிருந்துமேற்காகவந்தோமானால், மதுரைக் காலேஜும், மீனாக்ஷி மில்ஸ் என்னும் பஞ்சாபீஸும் காணப்படுகின்றன. நகரின் தென் பாகத்தில் சௌராஷ்டிரர்கள் ஏராளமாக வசிக்கிறார்கள். இவர்களில் பெரும்பான்மையோர் நெசவுத் தொழிலும் சாயத்தொழிலும் செய்பவர்கள். இந்நகரில் நெய்யப்படும் சரிகை வஸ்திரம், சாய வஸ்திரம், பட்டு வஸ்திரம் முதலியன வெளி ஊர்களுக்கு ஏற்றுமதியாகின்றன.

நகரத்தின் மத்தியில் ஆரம்பப் பாடசாலைகள் பல இருக்கின்றன. சிங்காரத் தோட்டங்களும், எலெக்

டிரிக் விளக்குகளும், தார் போட்ட ரஸ்தாக்களும் நகரை அலங்கரித்துள்ளன. இந்நகரம் வியாபாரம், கைத்தொழில் முதலியவற்றில் மேன்மை பெற்றது. இதை நமது இராஜதானியாகிய சென்னை நகரத்துக்கு இரண்டாவதாகச் சொல்லுகிறார்கள்.

பயிற்சி

1. மதுரை எந்த ஆற்றின் கரையில் இருக்கிறது?
2. மீனாட்சி அம்மன் கோவிலில் பார்க்கத்தக்க பாகங்கள் எவை?
3. மங்கம்மாள் வசித்து வந்த பழைய அரண்மனையில் இப்பொழுது என்ன இருக்கிறது?
4. இராய கோபுரம் எந்த வீதியில் இருக்கிறது?
5. இது யாரால் கட்டப்பட்டது?
6. கீழ வெளி வீதியிலுள்ள பார்க்கத்தகுந்த கட்டிடங்கள் சொல்லுங்கள்.
7. திருமலை நாயக்கர் மஹாலில் இருக்கும் கச்சேரிகள் எவை?
8. ஏன் பலர் இதைப் பார்க்க வருகிறார்கள்?
9. தமிழ்ச் சங்கம் எந்த வீதியிலிருக்கிறது? இது யாரால் ஸ்தாபிக்கப்பட்டது?
10. மதுரை வாசிகளுக்குக் குடிக்கும் ஜலம் எவ்வாறு கொண்டுவரப் படுகிறது?
11. தமுக்கம் யாரால் கட்டப்பட்டது?
12. அது எதற்காகக் கட்டப்பட்டது?
13. அது தற்காலத்தில் எவ்வாறு உபயோகிக்கப்படுகிறது?

ரஸ்தா மார்க்கம்

மதுரையிலிருந்து தெற்கே போகும் ரஸ்தாவில் செல்லுவோம். சுமார் 2 மைல் தூரத்திலுள்ள அவனியாபுரம் வந்து சேருவோம். இதன் பக்கத்தில் மதுரை முனிசிபாலிட்டியாரால் நடத்தப்பெறும் விவசாயப் பண்ணையைப் பார்க்கலாம். இப்பண்ணையில் மதுரையில் கழிவாகும் சாக்கடைத் தண்ணீரைப் பாதாளச் சாக்கடைக் குழாய்கள் மூலம் கொண்டு வந்து சாகுபடி செய்கிறார்கள். ஏராளமாய்க் காய், கறிகளும் பயிர், பச்சைகளும் மாடுகளுக்கு நல்ல பால் தரும் உணவாகிய 'கினிகிராஸ்' என்ற புல்லும் விளைகின்றன. இதனால் இங்குள்ள குடிகள் நல்ல லாபமடைகிறார்கள். இந்த ரஸ்தா நேராக அருப்புக்கோட்டைக்குச் செல்லுகிறது.

திரும்பவும் மதுரைக்கு வந்து, தென்மேற்காய்ச் செல்லும் ரஸ்தாவில் செல்லுவோம். வழியில் அரசாங்கத்தாரால் நடத்தப் பெறும் தொழிற் கல்விச் சாலையைப் பாருங்கள். இதில் மாணவர்களுக்கு இரும்பு வேலையும், மரவேலையும், மற்ற இயந்திர வேலைகளும் கற்றுக்கொடுக்கிறார்கள். பின் சுமார் 2 மைல் தூரத்திலுள்ள பசுமலை வந்து சேர்வோம். அங்குக் குன்றொன்று தெரிகிறது. அந்தக் குன்றின் மேலும், அடிவாரத்திலும் அமெரிக்கக் கிறிஸ்துவப் பாதிரியார்கள் வசிக்கின்றனர். இங்கே ஒரு ஹைஸ்கூலும், டிரெயினிங் ஸ்கூலும், மஹாலக்ஷ்மி மில்ஸ் என்ற பஞ்சு இயந்திரச்சாலையும் இருப்பதைப் பாருங்கள்.

அப்பால், திருப்பரங்குன்றம் செல்லுவோம். இது ஒரு சுப்பிரமணியர் ஸ்தலம். இந்த ரஸ்தாவில் நேராகச் சென்று திருமங்கலம் என்னும் ஊரை அடைவோம். அங்கிருந்து தெற்காகக் கள்ளிக்குடி, சாத்தூர் மார்க்

மதுரைஜில்லா
கோயம்புத்தூர் ஜில்லா
திருச்சிராப்பள்ளி ஜில்லா
புதுக்கோட்டை சமஸ்தானம்
திருவாங்கூர் சமஸ்தானம்
இராமநாதபுரம் ஜில்லா
பழனித்தாலூகா
திண்டுக்கல்தாலூகா
கொடைக்கானல் தாலூகா
நிலக்கோட்டைதாலூகா
மேலூர் தாலூகா
பெரியகுளம் தாலூகா
திருமங்கலம் தாலூகா
மதுரை தாலூகா
பழனி
திண்டுக்கல்
நத்தம்
கொட்டாம்பட்டி
மேலூர்
பேரையூர்
கம்பம்
சின்னமனூர்
உத்தமபாளையம்
வ
மே
கி
தெ
இருப்புப்பாதை
வண்டிப்பாதை
தாலூகா எல்லை

கம் திருநெல்வேலிக்குச் செல்லுகிறது.

அதன் ஒரு கிளை கல்லுப் பட்டி வழியாய் ஸ்ரீவில்லிபுத்தூருக்கும், கல்லுப்பட்டியிலிருந்து மற்றொரு கிளை, பேரையூர், சாப்டூர் முதலான ஊர்களுக்கும் செல்லுகின்றன.

இனி, நாம் மதுரைக்குத் திரும்பி வந்து, வடமேற்காய்ச் செல்லும் ரஸ்தாவில் செல்லுவோம். இப்பாதை, வைகை நதியோரமாகவே செல்லுகிறது. வழியில் செழிப்பான வயல்களையும் ரஸ்தாவில் இருபுறங்களிலும் பசுமையான மரங்களையும் தென்னந் தோப்புகளையும் பாருங்கள். பேரணை வந்து சேர்ந்தோம். இங்கே பெரியாற்



பேரணை

றிலிருந்து வரும் தண்ணீரை அணையினால் தேக்கி, நிலக் கோட்டை, மதுரை, மேலூர் தாலுகாக்களிலுள்ள நிலங்களுக்குத் திருப்புகிறார்கள். இதனால் இந்தத் தாலுகாக்களில் நெல் விளைவு அதிகம் ஏற்பட்டிருக்கிறது.

இனி, வடக்காகச் சென்று, நிலக்கோட்டை சேர்வோம். இதற்கு மேற்கில் சுமார் 8 மைல் தூரத்திலுள்ள வத்தலக்குண்டு என்ற ஊருக்குப் போவோம். இங்குப் பாயும் மஞ்சள் ஆற்றில் வருஷம் முழுவதும் ஜலம் ஓடுகிறது. இது ஒரு செழிப்பான பிரதேசம். இங்கே ஒருவிதச் சம்பா நெல் ஏராளமாய் விளைகிறது.

இங்கிருந்து மேற்கே சென்று, வடக்கே திரும்பிக் கோடைக்கானல்



கொடைக்கானல்

மலையை அடைவோம். இதன் மத்தியில் ஒரு பெரிய ஏரி இருக்கிறது. இதைச் சுற்றிலுமுள்ள அழகிய ரஸ்தாக்களையும், பங்களாக்களையும் கவனியுங்கள். மலைச் சரிவுகளிலுள்ள நீர்வீழ்ச்சிகளையும் பாருங்கள். இம்மலைமேல் இருக்கும் நக்ஷத்திர ஆபீஸைப் பார்ப்போம். இப்பிரதேசத்தில் பேரிக்காய், முட்டைக்கோஸ் என்னும் கீரை, ஐரோப்பியக் காய்கறிகள், காப்பி, தேயிலை, வாழை முதலியன அதிகமாய் விளைகின்றன. இம்மலையின் காட்சி பார்க்கத் தகுந்தது.

இங்கிருந்து மேற்கே சென்று, பெரிய குளம் போய்ச் சேருவோம். இது வராக நதிக் கரையின் மீது இருக்கிறது. பழனி மலை மேலுள்ள பேரீச்சம் என்ற ஒரு பெரிய ஏரியிலிருந்து குடிக்கும் ஜலம் இந்த ஊருக்குக் குழாயின் மூலம் கொண்டுவரப் படுகிறது. இங்குச் சில சர்க்கார் கச்சேரிகளும், ஒரு ஹைஸ்கூலும் இருக்கின்றன. இங்கே செழித்து வளர்ந்துள்ள தென்னந் தோப்புகளைப் பாருங்கள். இவ்வூர் அருகில் சிதம்

பரத் தீர்த்தம் என்ற ஒரு நீர்வீழ்ச்சி இருக்கிறது.

பெரிய குளத்திலிருந்து தென்மேற்காகச் செல்லுவோமானல், தேனி என்னும் ஊரை அடைவோம். இது ஒரு ரயில்வே ஸ்டேஷன். இங்கே ஒரு பஞ்சு அரைக்கும் சாலையும், சத்திரமும் இருக்கின்றன. இங்கு வாரத்துக் கொரு முறை பெரிய சந்தை ஒன்று கூடுகிறது. இங்கிருந்து ரஸ்தா மூலம் தெற்கே செல்லுவோம்.

சின்னமனூர் வழியாய் உத்தமபாளையம் சேர்வோம். இங்கு ஒரு ஹைஸ்கூல் இருக்கிறது.

இதைக் கடந்து கம்பம் என்னும் ஊரை அடைவோம். இப் பிரதேசம் ஒரு பள்ளத்தாக்கு. இது ஒரு குளிர்ந்த ஈரமான பிரதேசம். இது சுற்றிலும் விளையும் தானிய வகைகளுக்கு மத்திய ஸ்தலமாக இருக்கிறது. இதன் சீதோஷ்ண ஸ்திதி, தொத்துவியாதிகளை உண்டாக்கத் தக்கது. இதன் அருகிலுள்ள காடுகளில் விலையுயர்ந்த மரங்கள் செழித்து வளர்கின்றன. இங்கே வசிக்கும் ஜனங்களில் பெரும்பாலோர் கன்னடம் பேசும் காபிலியர்கள்.

இந்த ரஸ்தாவின் வழியாய்க் கூடலூர் செல்லுவோம். இது ஒரு யூனியன் பட்டணம்.

இங்கிருந்து சுமார் 10 மைல் தூரத்திலுள்ள பெரியாற்று ஏரிக்குப் போவோம். இங்குள்ள அணைக்கட்டைப் பார். இதில் தேக்கி யுள்ள தண்ணீரினல் இந்த ஜில்லாவில் சுமார் ஒன்றரை லட்சம் ஏக்கர் நிலம் சாகுபடி செய்யப்படுகிறது.



பெரியாற்றுத் தேக்கம் (அணைக்கட்டு)

அங்கிருந்து திரும்பி மறுபடியும் தேனி வந்து சேர்ந்தோம். தேனியிலிருந்து ஒரு ரஸ்தா மேற்காகப் போடிநாயக்கனூருக்குப் போகிறது. நாம் கிழக்காகத் திரும்பி, ஆண்டிப்பட்டி, உசிலம்பட்டி மார்க்கமாக மதுரைக்குப் போவோம். ரஸ்தாவின் இரு பக்கங்களிலும் பாறைகளிலிருந்து வெட்டி எடுத்த சல்லிக் கற்கள் குவியல் குவியலாகக் குவித்திருப்பதைப் பார். இது மேட்டுப் பாங்கான நிலம். இங்கே நீர் வசதி குறைவு.

இப்பொழுது நாம் மதுரையிலிருந்து வட மேற்காகத் திண்டுக்கல் மார்க்கமாகப் பழனிக்குப் போகும் ரஸ்தாவில் பிரயாணம் செய்வோம். இரு பக்கங்களிலு முள்ள சோலைகளையும் செழிப்பான நிலங்களையும் பார். அம்மைய நாயக்கனூர் வந்து சேர்ந்தோம். இது ஒரு ஜமீன் பட்டணம். இங்கிருந்து கொடைக்கானல் மலை, மேற்கே 50 மைல் தூரத்திலிருக்கிறது. இந்த ரஸ்தாவின் வடக்கே சென்ருல் திண்டுக்கல் போய்ச் சேரலாம்.

ரஸ்தாவின் இரு புறங்களிலும் பழத் தோட்டங்களையும் காய் கறித் தோட்டங்களையும் பார்க்கிறோம்.

திண்டுக்கல் வந்து சேருவோம். இது ஒரு ரயில்வே ஜங்ஷன்.



திண்டுக்கல் குன்று

இதை அடுத்துள்ள குன்றின் மேல் ஒரு கோட்டை இருக்கிறது.

இங்கிருந்து ஒரு ரஸ்தா வடகிழக்காக அய்யலூர் மார்க்கமாய்த் திருச்சிக்குச் செல்லுகிறது.

திண்டுக்கல்லி லிருந்து மேற்கே 10மைல் தூரத்திலுள்ள கன்னிவாடிக்குப் போவோம். இது ஒரு ஜமீன் பட்டணம். இங்கே வாழைப்பழ விளைவு அதிகம்.

மறுபடியும் திண்டுக்கல் வந்து மேற்காகப் பழனிமலைக்குச் செல்லுவோம். இப் பிரதேசம் நீர்வள மற்றது; சொற்ப மழையை உடையது. இங்கு உளுந்து, துவரை, பாசிப்பயறு விசேஷமாய்ப் பயிராகின்றன. பருத்தி விளையும் வயல்களையும், புகையிலைத் தோட்டங்களையும் இங்கு விசேஷமாய்க் காணலாம்.

பழனி மலையின் மீதுள்ள பழனியாண்டவர் கோவில் தென்னிந்தியா



பழனிமலைக் கோவில்

வில் மிகவும் பிரசித்தி பெற்றது. இங்கு அநேக சத்திரங்களும், கச்சேரிகளும், ஒரு ஹைஸ்கூலும் இருக்கின்றன.

இங்கிருந்து வடமேற்காக ஒரு ரஸ்தா உடுமலைப் பேட்டைக்கும், வடக்காக ஒரு ரஸ்தா தாராபுரத்துக்கும் செல்லுகின்றன. மறுபடியும் இங்கிருந்து மதுரைக்குப் போவோம்.

மதுரையின் வடக்கில் தல்லாகுளம் முன் பார்த்தோமல்லவா? அங்கிருந்து 4 ரஸ்தாக்கள் முறையே நத்தம், அழகர் கோவில், மேலூர், சிவகங்கைக்குச் செல்லுகின்றன. நாம் நத்தம் போகும் ரஸ்தாவில் மோட்டாரில் போவோம். ரஸ்தாவின் இரு புறங்களிலும் நெல் வயல்களையும், வடக்கே போகப் போக மேட்டு நிலங்களில் கடலை, துவரை முதலிய பயிர்களையும் காண்கிறோம்.

நத்தம் வந்து சேர்வோம். சிறுமலைக்கும் அழகர் மலைக்கும் மத்தியில் இருக்கும் கணவாயைப் பார்ப்போம். இங்குள்ள விறகு பல ஊர்களுக்கு விற்பனைக்கு அனுப்பப்படுகிறது. இப் பக்கங்களில் நிலக்கடலை, பருத்தி முதலியன விளைவு

அதிகம். இங்கே எண்ணெய் வியாபாரம் விசேஷம்.

இங்கிருந்து கிழக்காகக் கொட்டாம் பட்டிக்கு வந்து சேர்வோம். முற்காலத்தில் இது இராமேஸ்வரம் செல்லும் யாத்திரிகர்களுக்குத் தங்குமிடமாயிருந்தது. இதைச் சூழ்ந்துள்ள மலைகளில் இரும்பு மணல் அதிகமுண்டு. அங்கிருந்து ஒரு ரஸ்தா வடக்காகத் திருச்சிக்குப்போகிறது.

இங்கிருந்து மேலூருக்குப் போகும் ரஸ்தாவில் செல்லுவோம். வழியில் மலைகளையும் குன்றுகளையும் காண்போம். சாலைகளிலுள்ள மரங்களைப் பார். புளியமரம் அதிகம்.

மேலூர் வந்து சேர்வோம். இங்குள்ள செம்மண் பொட்டல்களெல்லாம் நன்செய் வயல்களாக மாறி விட்டன. ஏன்? இத் தாலூகாவின் தென் பாகத்தில் பெரியாற்று ஜலம் பாய்கிறது. ஆகையால், இங்கே நெல் விளைவு மிகுதி. இங்கே முன்சீபு கோர்ட்டு, தாசில்தார், சப் மாஜிஸ்டிரேட்டுக் கச்சேரிகளிருக்கின்றன. இங்கு ஒரு ஹைஸ்கூலும் இருக்கிறது.

இங்கிருந்து கிழக்கே ஒரு ரஸ்தா திருப்பத்தூர் மார்க்கமாய் ராமநாதபுரம் ஜில்லாவுக்குப் போகிறது.

இங்கிருந்து தெற்கே 6 மைல் தூரத்தி லுள்ள திருவாதவூருக்குச் செல்லுவோம். இது பாண்டியனிடம் ஒரு காலம் மந்திரியாயிருந்த மாணிக்கவாசக சுவாமிகள் பிறந்த இடம். இங்கிருந்து கிழக்கு முகமாய் ரஸ்தா சிவகங்கையை அடைகிறது.

மேற்கே திரும்பி மதுரைக்கு வந்து சேர்வோம். அங்கிருந்து வட கிழக்கில் 12 மைல் தூரத்திலுள்ள அழகர் மலைக்குச் செல்லுவோம். இங்கே



அழகர் கோவில்

மலையடிவாரத்தில் கோவிலையும், திருமலை நாயக்கரால் கட்டப்பட்ட பழைய கட்டடங்களையும் காணலாம். மலையில் ஒரு சிற்றருவி விழுகிறது. அதில் ஜனங்கள் சென்று ஸ்நானம் செய்வார்கள். இவ்வாலயத்திலுள்ள அழகர் விக்கிரகம் மிக்க அழகு வாய்ந்தது. அழகர் கள்ளர்களின் குல தெய்வம். ஆடி மாதத்தில் விசேஷமான திருவிழா இங்கே நடைபெறுகிறது. இங்கே சாயச்சரக்குகள் விளைகின்றன. அழகர் மலையைச் சுற்றிப் பார்த்து மதுரைக்கு வந்து சேர்ந்தோம்.

பயிற்சி

1. மதுரைத் தாலூகாவில் விவசாயப் பண்ணைகள் எங்கெங்கே உள்ளன?

2. அப் பண்ணையில் பயிராகும் பொருள்களையும், அவைகளுக்கு ஏற்பட்டிருக்கும் ஜல வசதியையும் சொல்லு.

3. திருமங்கலம் தாலூகாவில் பருத்தியும்

பயறு வகைகளும் விசேஷமாய் உண்டாகக் காரணமென்ன?

4. வத்தலக்குண்டில் என்ன பயிராகிறது? ஏன்?

5. பெரிய குளத்தில் விளை பொருள்களென்ன?

6. கம்பம் பள்ளத்தாக்கு எங்கிருக்கிறது?

7. அது ஏன் முக்கியமானது?

8. மேலூர் ரஸ்தாவின் தென் பாகத்தில் நெல் விசேஷமாகப் பயிராகிறது. ஏன்?

9. திண்டுக்கல்லில் பயிராகும் பொருள்கள் எவை?

10. அழகர் கோவிலில் உள்ள விசேடங்களைச் சொல்லு.

11. மதுரையிலிருந்து பெரியகுளம் போகும் ரஸ்தாவில் இரண்டு செழிப்புள்ள ஊர்களைச் சொல்லு.

12. கொடைக்கானல் மலையில் என்னென்ன உற்பத்தியாகின்றன?

ரயில் பிரயாணம்

இது ஒரு முக்கியமான ரயில்வே ஜங்ஷன். இங்கிருந்து கிழக்கே சிலைமான் மார்க்கம் இராமநாதபுரத்துக்கும், தெற்கே சாத்தூர் மார்க்கம் தூத்துக்குடிக்கும், மேற்கே போடிநாயக்கனூருக்கும், வடமேற்கே பழனி மார்க்கம் கோயம்புத்தூருக்கும், வடக்கே அய்யலூர் மார்க்கம் திருச்சிக்கும் இருப்புப்பாதைகள் செல்லுகின்றன.

ரயில் மார்க்கமாக நமது ஜில்லா முழுவதையும் சுற்றிப் பிரயாணம் செய்வோம். கிழக்கே செல்லும் ரஸ்தாவில் சிலைமான் வரைக்கும் செல்லுவோம். இவ்வழி வைகையாற்று ஓரமாகவே செல்லுகிறது. இரு பக்கங்களிலும் நன்செய் நிலங்களும் தென்னந் தோப்புகளும் செழிப்புற்றிருக்கின்றன. இங்கிருந்து இந்த



மதுரை ரயில்வே ஸ்டேஷன்

ரயில் பாதை இராமேஸ்வரம் வரை செல்லுகிறது.

மதுரைக்கு வந்து, தெற்கே செல்லும் ரயிலில் உட்காருவோம். ரயில் புறப்பட்டுவிட்டது. இரு பக்கமும் சிறு சிறு குன்றுகளும் பஞ்சு ஆபீஸ்களும் காணப்படுகின்றன. பசுமலை, திருப்பரங்குன்றம் முதலிய ஊர்களின் வழியாக இருப்புப்பாதை செல்லுகிறது. இப்பாதையின் இரு பக்கங்களிலும் கரிசல் மண் பூமியே காணப்படுகின்றது; பருத்தி விசேஷம். ஆறுகள் ஒன்றையும் காணோம். கப்பலூர், திருமங்கலம் தாண்டி, கள்ளிக்குடி வந்து சேர்வோம். இங்கிருந்து ரயில் பாதை, சாத்தூர் மார்க்கமாய்த் தூத்துக்குடிக்குச் செல்லுகிறது. இனித் திரும்பி வேறு மார்க்கம் செல்லுவோம்.

போடிநாயக்கனூருக்குச் செல்லும் ரயிலில் உட்காருவோம். ரயில் புறப்பட்டுவிட்டது. கொஞ்ச தூரம் போன பின், மலைகளும் சிறு குன்றுகளும் பாறை நிலங்களும் காணப்படுகின்றன. நாகமலை, செக்கானூருணி

வாலாந்தூர் தாண்டி உசிலம்பட்டி ஸ்டேஷனுக்கு வருவோம். இது திருமங்கலம் தாலுகாவைச் சேர்ந்தது. பிறகு தொட்டப்பநாயக்கனூர் ஸ்டேஷனுக்கு வந்து சேர்வோம். இது ஆண்டிப்பட்டி மலைக்கு இடையிலுள்ள ஒரு கணவாயின் மேல் இருக்கும் கிராமம்.

இந்தக் கணவாயின் வழியாய் ரயில் போகிறது; பெரியகுளம் தாலுகாவிலுள்ள ஆண்டிப்பட்டி ஸ்டேஷனில் நின்றது. வள்ளல் நதி, தேனி, பூதிப்புரம் முதலிய ஸ்டேஷன்களைக் கடந்தோம். போடிநாயக்கனூர் வந்தோம். மதுரையிலிருந்து வரும் தென்னிந்திய ரயில் பாதை இங்கே முடிகிறது. இது தேனி நதி பள்ளத்தாக்கில் இருக்கிறது. நதியின் ஓரங்களில் நெல் விளைவு மிகுதி. இங்கே கச்சேரிகளும் ஒரு ஹைஸ்கூலும் உண்டு. கண்ணன் தேவி மலையிலுள்ள தோட்டங்களுக்கும், தேயிலை, ஏலத் தோட்டங்களுக்கும் போகும் பாதையில் இருப்பதால் இந்த ஊர் வியாபார விருத்தியடைந்து வருகிறது. போடிநாயக்கனூரிலிருந்து மறுபடியும் மதுரைக்கு வருவோம்.

இப்பொழுது திண்டுக்கல் மார்க்கம் போகும் ரயிலில் உட்காருவோம். ரயில் புறப்பட்டுவிட்டது; வைகை யாற்றுப் பாலம் தாண்டிவிட்டது; சமையநல்லூர் வந்தோம். ரயில் போகும் மார்க்கங்களின் இரு பக்கங்களிலும் செழிப்பான வயல்களும் தென்னந் தோப்புகளும் காணப்படுகின்றன. சோழவந்தானுக்கு வந்தோம். இது நிலக்கோட்டைத் தாலுகாவைச் சேர்ந்தது; வைகை நதியின் வடகரையில் இருக்கும் ஒரு யூனியன் டவுன். பிறகு அநேக ஸ்டேஷன்கள் தாண்டி அம்மையநாயக்கனூர் (கொடைக்கானல் ரோடு) வந்தோம். இரு பக்கங்களிலும் மலைகள் காணப் படுகின்றன. பிறகு, மேடான பிரதேசத்தில் உள்ள அம்பாத்துரை ஸ்டேஷனைத் தாண்டித் திண்டுக்கல் வந்தோம். இது ஒரு ஜங்ஷன்.

திருச்சி போகும் ரயிலில் உட்கார்ந்தோம். வடமதுரை தாண்டுகிறோம்; அங்குப் பாதையின் இரு பக்கங்களிலும் குவித்துள்ள விறகுகள் ஏற்றுமதியாகின்றன. எதிரில் மலைகளும் குன்றுகளும் காணப்படுகின்றன. அய்யலூர் வந்து சேர்ந்தோம். இனித் திரும்பித் திண்டுக்கல்லுக்குச் செல்லுவோம்.

திண்டுக்கல்லில் இருந்து பழனிக்குப் போகும் ரயிலில் உட்காருவோம். செவ்வல் நிலங்களும், கரிசல் நிலங்களும் இங்கே காணப்படுகின்றன. ரயில் பலக்கனூத்து, ஒட்டன் சத்திரம், சத்திரப்பட்டி முதலிய ஸ்டேஷன்களைத் தாண்டிற்று. பழனி வந்து சேர்ந்தோம். இங்கிருந்து இந்த ரயில் பாதை உடுமலைப் பேட்டை மார்க்கமாய்க் கோயம்புத்தூருக்குப் போகிறது.

பயிற்சி

1. மதுரையிலிருந்து கள்ளிக்குடிக்கு ரயில் மார்க்கம் போனால் நீ கடக்க வேண்டிய இரண்டு முக்கிய ஸ்டேஷன்களைச் சொல்லு.
2. மதுரையிலிருந்து அம்மைய நாயக்கனூருக்குப் போகும் மார்க்கத்தில் நீர் வளம் பொருந்திய ஸ்டேஷன் எது?
3. அம்பாத்துரையில் ரயில்களோ வண்டிகளோ மெதுவாக ஏன் செல்லுகின்றன?
4. திண்டுக்கல் ஒரு ஜங்ஷன். ஏன்?
5. அய்யலூர் ஸ்டேஷனில் என்ன ஏற்றுமதி நடக்கிறது?

6. பழனிக்குப் பிரயாணிகள் ஏன் அதிக மாய் வருகிறார்கள்?

7. இத் தாலூகாவில் நில அமைப்பு எப்படி?

இருபத்தோராம் பாடம்

வியாபாரம்

உங்களில் அநேகரின் பெற்றோர் களுக்குச் சொந்த நிலம் இருக்கிற தல்லவா? அவைகளில் விளையும் தானியங்களில் கொஞ்ச பாகத்தைச் சொந்த உபயோகத்திற்காக வைத்துக் கொண்டு, மீதியை விற்று, தேவை யான துணி முதலிய அநேக பொருள் களை வாங்கிக்கொள்கிறார்கள் அல் லவா? அதே போல் நமது ஜில்லா வில் நமக்குத் தேவை யில்லாத பொருள்களை வெளி யிடங்களுக்கு அனுப்பிவிட்டு, நமது ஜில்லாவில் கிடைக்காத நமக்குத் தேவையான பொருள்களை வெளியிடங்களிலிருந்து வரவழைத்துக்கொள்ளுகிறோம். இத ற்கு வியாபாரம் என்று பெயர். சாமான்களை வெளியூருக்கு அனுப்பு வதை ஏற்றுமதி என்றும், வெளியூரி லிருந்து சாமான்களை வரவழைப் பதை இறக்குமதி என்றும் சொல்லுவ துண்டு.

நமது ஜில்லாவிலிருந்து அயல் நாடுகளுக்கு ஏற்றுமதியாகும் சாமான் கள் பருத்தி, காப்பிக்கொட்டை, தேயிலை, சுருட்டு, வாழைப்பழம், தோல்.

இதர தேசங்களி லிருந்து மண் ணெண்ணெய், மோட்டார் வண்டிகள், இரும்பு, கண்ணாடிச் சாமான்கள், தீப் பெட்டிகள், காகிதங்கள், சீமைத் துணி கள் நம் ஜில்லாவில் இறக்குமதியா கின்றன. நமது நாட்டில் கைத்தொ ழில் குறைவா யிருப்பதால், அநேக சாமான்களை அயல் நாடுகளி லிருந்து வாங்கவேண்டி இருக்கிறது.

பயிற்சி

1. காப்பிக்கொட்டை எங்கிருந்து ஏற்று மதியாகிறது?

2. மதுரையி லிருந்து ஏற்றுமதி யாகும் பொருள்கள் யாவை?

3. மலைவாழைப்பழம் எவ்விடங்களிலிருந்து ஏற்றுமதியாகிறது?

4. நாம் அநேக சாமான்களை அயல் நாடு களிலிருந்து வாங்கவேண்டி யிருக்கிறது. ஏன்?

நெ.	தாலூகா	ஏற்றுமதிச் சாமான்கள்
1	மதுரை	நெல், பருத்தி, சுன்னடிப் புடவைகள், சரிகை வேஷ்டிகள், பட்டு நூல் வஸ்திரங்கள், வெங்கலப் பாத்திரம்.
2	திண்டுக்கல்	சுருட்டு, தோல், பூட்டு, வெங்கலப் பாத்திரங்கள், இரும்புப் பெட்டிகள், மலை விளைவான காப்பிக் கொட்டை, மலை வாழைப்பழம், மலைப்பூடு.
3	பழனி	மலை விளைவுகளான காப்பிக்கொட்டை, தேயிலை, மலை வாழைப் பழம், மலைப்பூடு.
4	பெரியகுளம்	உளுந்து, துவரை, பாசிப்பயறு, எள்ளு, நெல், கொட்டை முத்து.
5	மேலூர்	நெல், கொட்டைமுத்து.
6	திருமங்கலம்	பருத்தி.
7	நிலக்கோட்டை	பித்தளை, செம்புப் பாத்திரங்கள்.
8	கொடைக்கானல்	மலைச்சாமான்கள், காப்பி, மலைப்பழம், ஆரஞ்சு, ஏலம்.

சீதோஷ்ண நிலை; அதற்கும் தாவரங்களுக்கும் மனித வாழ்க்கைக்கும் உள்ள சம்பந்தம்

தம்பி:-அண்ணா, நமது தகப்பனார் எங்கே போயிருக்கிறார்?

அண்ணன்:-தம்பி, அவர் கோடைக் கானலுக்குப் போயிருக்கிறார். அவர் திரும்பி வர இன்னும் ஒரு மாதம் செல்லும்.

த:-அங்கே அவர் எதற்காக ஒரு மாதம் தங்குகிறார்?

அ:-இப்பொழுது கோடைக் கால மல்லவா? இங்கு எவ்வளவு உஷ்ணமாயிருக்கிறது! அதனால் தான் நமது பாடசாலையிலும் விடுமுறை விட்டிருக்கிறார்கள். கோடைக்கானல் குளிர்ச்சியாயிருக்கும். ஆகையால் நமது பிதா அங்கே ஒரு மாதம் இருந்து விட்டு வருவார்.

த:-இங்கு இவ்வளவு உஷ்ணமாயிருக்கும் பொழுது கோடைக்கானலில் மாத்திரம் குளிர்ச்சியா யிருப்பதன் காரணம் என்ன?

அ:-நமது ஊர் தாழ்ந்த சம வெளியிலிருக்கிறது. நமது தேசமும் உஷ்ணதேசம். ஆதலால் இங்கு உஷ்ணமாயிருக்கிறது. கோடைக்கானல் உயரமான மலைப் பிரதேசம். ஆகையால் அங்குக் குளிர்ச்சியாயிருக்கிறது.

த:-அண்ணா, கோடைக் கால வாசத்துக்கு ஜனங்கள் இன்னும் எங்கே செல்லுகிறார்கள்?

அ:-சிலர் நீலகிரி மலையிலுள்ள உதக மண்டலத்துக்குப் போகிறார்கள். வேறு சிலர் மண்டபம், கன்னியா குமரி முதலிய கடற்கரையிலுள்ள ஊர்களுக்குச் செல்லுகிறார்கள்.

த:-கடற் கரைக்கு ஏன் செல்லுகிறார்கள்?

அ:-கடற் கரையில் அடிக்கடி கடற் காற்று வீசிக்கொண்டிருக்கும். அக் காற்றுக் கோடைக்கால உஷ்ணத்தையும் குளிர்காலச் சீதளத்தையும் குறைக்கும்.

ஆகவே, உஷ்ண தேசத்திலுள்ள சமவெளிகள் உஷ்ணமாகவும், உயர்ந்த மலைப் பிரதேசங்கள் குளிர்ச்சியாகவும், கடற்கரைப் பிரதேசங்கள் கோடைக்காலத்திலும் குளிர் காலத்திலும் மித உஷ்ணமாகவும் இருக்கும்.

த:-மலைப் பிரதேசங்களில் மரங்கள் அடர்த்தியா யிருக்கின்றனவே என்ன காரணம்?

அ:-அங்கு அடிக்கடி மழை பெய்வதால் காடுகள் அடர்ந்து மரங்கள் உண்டாயிருக்கின்றன.

த:-அங்குள்ள ஜனங்கள் எப்படி ஜீவிக்கின்றார்கள்?

அ:-அப்பிரதேசத்திலுள்ள காடுகளில் மரங்களை வெட்டியும், வேட்டையாடியும் அங்குள்ள ஜனங்கள் ஜீவனம் செய்கிறார்கள். சில மலைச் சரிவுகளில்தேயிலை,காப்பி,ரப்பர், ஏலக்காய் முதலியவை பயிர் செய்யப்படுகின்றன. நூற்றுக்கணக்கான ஜனங்கள் அத் தோட்டங்களில் வேலை செய்கிறார்கள்.

த:-நாம் வசிக்கும் சமவெளியிலுள்ள ஜனங்களின் முக்கியத் தொழில் என்ன?

அ:-நமது பிரதேசத்தி லுள்ளவர்களின் தொழில் விவசாயம். இங்குச் சில நிலங்களில் நெல், வாழை, கரும்பு முதலியவைகள் பயிர் செய்யப்படுகின்றன; வேறு சில நிலங்களில் பருத்தி, சோளம் முதலியவைகளை ஜனங்கள் விளைவிக்கிறார்கள்.

த:-அதற்கு என்ன காரணம்?

அ:-நிலங்களில் நன்செய் என்றும் புன்செய் என்றும் இரண்டு வகைகள் உண்டு என்பது உனக்குத் தெரியுமல்லவா? உஷ்ணமும் மழையும் அதிகமான இடங்களில் நன்செய்ப் பயிர்களாகிய நெல், வாழை முதலியவைகளும், மழை குறைவான இடங்களில் பருத்தி, சோளம், கம்பு முதலிய புன்செய்ப் பயிர்களும் சாகுபடி செய்யப்படுகின்றன.

த:-அண்ணா, நம் ஊரில் ஆட்டு மந்தைகளையும், மாட்டு மந்தைகளையும் மேய்ப்பதற்கு எங்கேயோ ஓட்டிக் கொண்டுபோகிறார்களே! அவைகள் எங்கே மேய்கின்றன?

அ:-இடையர்கள் அவைகளை மலையடிவாரத்துக்கும், சாகுபடி செய்யாத இடங்களுக்கும் ஓட்டிக்கொண்டு போகிறார்கள். அங்கே புல் நன்றாய் வளர்ந்திருக்கும். அவைகள் அவ்விடங்களில் வயிறாரப் புல் மேய்கின்றன.

த:-நமது நாட்டின் சில பாகங்களில் பருத்தி விசேஷமாய்ப்பயிராகிறது. அங்குள்ள ஜனங்கள் என்ன தொழில் செய்கிறார்கள்?

அ:-பருத்தி பயிராகும் பாகங்களில் பஞ்சாலைகள் அனேகம் ஏற்படுத்தப் பட்டிருக்கின்றன. அங்குள்ள ஜனங்களில் அநேகர் அவைகளில் வேலை செய்கிறார்கள். சிலர் நூல்நூற்றும், பஞ்சு வஸ்திரங்கள் நெய்தும் பிழைக்கிறார்கள். அப்பிரதேசத்தில் நூல் நூற்கும் இயந்திரசாலைகளும், நெசவு இயந்திரசாலைகளும் ஏற்படுகின்றன. அவைகளிலும் ஜனங்கள் வேலைசெய்து ஜீவிக்கிறார்கள்.

த:-கடற்கரைகளில் வாழும் ஜனங்களின் தொழில் என்ன?

அ:-கடற் கரைகளில் அநேகமாகச் செம்படவர்கள் வசிக்கிறார்கள். அவர்கள் கட்டுமரங்களிலும், படகு

களிலும் ஏறிச்சென்று, கடலில் மீன் பிடிக்கிறார்கள். அவர்கள் கடலில் நீந்துவதிலும் மூழ்குவதிலும் வல்லவர்கள்; ஆதலால் கடலில் அதிக ஆழத்திலுள்ள முத்து, ஸ்பஞ்சு முதலிய பொருள்களை எடுக்கிறார்கள்.

த:-சில இடங்களில் கள்ளி, எருக்கு, வேல் முதலிய தாவரங்கள் ஏன் அதிகமாக இருக்கின்றன?

அ:-சில பிரதேசங்களில் மழை மிகக் குறைவு. ஆதலால் அங்கு அதிகத் தண்ணீர் தேவையில்லாத கள்ளி முதலிய முட்களடர்ந்த தாவரங்கள் உண்டாயிருக்கின்றன. அவைகள் சில வருஷங்கள் மழையில்லா விட்டாலும் பட்டுப் போகமாட்டா.

த:-மலையாளத்திலிருந்து தேங்காய் ஏராளமாய் வருகின்றன; அவைகள் பெரியவையாயு மிருக்கின்றன. அதற்குக் காரணம் என்ன?

அ:-மலையாளம் கடற்கரைப் பிரதேசத்தில் இருக்கிறது. அங்குத் தரை மணற் பாங்கானது. மணற் பாங்கான இடங்களில் தென்னை, பனை, பாக்கு முதலிய மரங்கள் செழிப்பாய் வளரும். ஆதலால் அங்கே தென்னை மரங்கள் அதிகமாய்க் காணப்படுகின்றன. தேங்காய்கள் அங்கிருந்து அயல் பிரதேசங்களுக்கு வியாபாரத்திற்கு அனுப்பப்படுகின்றன. அங்குச் சவுக்கு மரங்களும் நன்றாய் வளர்கின்றன.

த:-இவ்வளவு உஷ்ணமான கோடைக் காலத்தில் மழை பெய்து கொண்டிருந்தால் குளிர்ச்சியாயிருக்குமே?

அ:-நீ சொல்வது உண்மைதான். ஆனால் இப்பருவத்தில் மழை பெய்வது அபூர்வம். நமது பிரதேசத்தில் ஐப்பசி, கார்த்திகை மாதங்களில் தான் மழைபெய்யும். ஏனென்றால் அப்பொழுதுதான் வடகிழக்கிலிருந்து ஒரு காற்று வீசுகிறது. அப்பொழுது மழை பெய்கிறது. அது தான் நமக்கு மழைக் காலம்.

த:-நமது நாட்டில் 'ஆடிப் பட்டம் தேடி விதை' என்று ஏன் சொல்லுகிறார்கள்?

அ:-ஆடி மாதத்தில் குடியானவர்கள் நிலங்களை உழுது விதைகளை விதைப்பார்கள். ஆவணி, புரட்டாசி மாதங்களில் கொஞ்சம் மழை பெய்யும். அதற்குள் பயிர்களும் முளைத்துச் சற்று வளர்ந்திருக்கும். ஐப்பசி, கார்த்திகை மாதங்களில் நல்ல மழை பெய்யும். அது பயிர்களுக்கு மிகவும் அனுகூலமாயிருக்கும். மார்கழி மாதக் கடைசியில் அல்லது தை மாதத்தில் கதிர்கள் முதிர்ந்து விடும். அப்பொழுது குடியானவர்கள் அறுவடை செய்வார்கள். ஆதலால் ஆடி மாதமே விதைப்பதற்கு மிகவும் தகுதியான காலம்.

த:-நிலங்களில் தை மாதம் அறுவடையான பிறகு ஆடி மாதம் வரை

குடியானவர்கள் என்ன செய்வார்கள்?

அ:-அறுவடையான பின் எள்ளு, நிலக்கடலை முதலியவைகள் பயிர் செய்யப்படுகின்றன. அவைகளுக்குத் தண்ணீர் அதிகமாகத் தேவையில்லை. சில சமயங்களில் கோடைக் காலங்களில் மழை பெய்வதும் உண்டு. இல்லாவிடில் கிணற்றிலிருந்து அப்பயிர்களுக்குத் தண்ணீர் இறைக்கப்படும். சில நிலங்களில் பருத்தியும் பயிர் செய்யப்படுகிறது.

த:-நமது நாடு முழுவதும் இவ்விதம் தான் விவசாயம் நடைபெறுகிறதா?

அ:-மலையாளக்கரையில் ஜூன், ஜூலை, ஆகஸ்டு மாதங்களில் ஏராளமான மழை பெய்கிறது. அங்கு அப்பொழுது உஷ்ணமும் தணிவடைகிறது. ஜனங்களும் அம்மாதங்களில் பயிர் செய்கிறார்கள். கோதாவரி, கிருஷ்ணா, காவேரி முதலிய நதிகள் பாயுமிடங்களில் ஜல வசதி அதிகமாயிருக்கும். ஆதலால் அங்கு நன்செய்களே அதிகமாய்க் காணப்படும். நெல், வாழை, கரும்பு முதலியவைகளே அங்கு விசேஷமாகப் பயிர் செய்யப்படுகின்றன.

த:-நமது நாட்டு ஜனங்களில் அநேகர் சட்டை யணிந்துகொள்வதில்லையே. என்ன காரணம்?

அ:-நமது நாடு உஷ்ணமானது. நாம் சட்டை முதலியவைகளை அணிந்துகொண்டால் வியர்வை அதிகமாகிறது. நமக்குக் காற்றோட்டம் அதிகமாய் வேண்டும். அதனால்தான் நாம் கோடைக்காலத்தில் பஞ்சினால் செய்த இலேசான ஆடைகளை அணிந்துகொள்ளுகிறோம். குளிர்காலத்தில் நாம் கம்பளிப் போர்வைகளை உபயோகிக்கிறோம்.

த:-மலைப் பிரதேசங்கள் சமவெளியை விடக் குளிர்ச்சியாயிருக்குமே. அங்குள்ளவர்கள் என்ன ஆடைகளை அணிந்துகொள்வார்கள்?

அ:-அவர்கள் கம்பளியினால் செய்த உடைகளை அணிவார்கள். அவைகள் தேகத்திலுள்ள உஷ்ணத்தை வெளியே போகாமல் காக்கும்.

பயிற்சி

1. கோடைக்காலத்தில் உஷ்ணம் தாங்க முடியாமல் ஜனங்கள் எங்கெங்கே செல்கிறார்கள்? அந்த இடங்களில் உஷ்ணம் குறைந்திருப்பதற்குக் காரணம் என்ன?
2. மலைப்பிரதேசத்தில் உள்ள ஜனங்கள் எப்படி ஜீவிக்கின்றார்கள்?
3. கடற்கரைகளில் வாழும் ஜனங்களின் தொழில் என்ன?
4. நமது நாட்டில் 'ஆடிப்பட்டம் தேடி விதை' என்று ஏன் சொல்லுகிறார்கள்?
5. தைமாதம் அறுவடையான பிறகு ஆடிமாதம் வரை குடியானவர்கள் என்ன செய்வார்கள்?

[illegible]